www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# பயணம்

புரட்டாதி 1986

இதழ் 2

எங்கள் தேவை
துண்டுத் துணியல்ல; முழு ஆடை.
பருக்கைகளல்ல; முழுச் சாப்பாடு.
ஒரு வேலை மட்டுமல்ல;
முழுத் தொழிற்சாலையும் எங்களுக்குத் தேவை.
நிலக்கரி, தாதுப் பொருள், உலோகக் கனி–
அத்தனையும் எமக்கு தேவை.
எல்லாவற்றையும் விட மேலாக
நாட்டினை, ஆளும் அதிகாரமும்
எங்களுக்கு தேவை.
நல்லது;
இவ்வளவும் எங்களுக்கு தேவை.
ஆனால்
நீங்கள் கொடுப்பதென்ன?

அரசியற் தத்துவார்த்த ஏடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே....

- விடுதலைப் பாதையில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை
- இயக்கங்களை விட்டு வெளியேறிய போராளிகளுக்கு
- அரசியற் குறிப்புகள்
- பிலிப்பைன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் செயல்திட்டம்
- கடந்த மூன்றுண்டு அனுபவத்தை படிப்பினையாக கொள்ளுவோம்
- பல்வேறு சமூகப் பிரிவினரை போராட்டத்தில் பயன்படுத்தலா ஈடுபடுத்தலா ?

R. Raveendran
No.6; 2nd Street
Andavar Nagar
Kodambakkum
Madras-600 024

விலை : ரூபா 4-00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பாதையில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் முன்னர் கொழும்பிலும் அதன் பின் இந்தியா, பூட்டான் போன்ற இடங்களிலும் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தி தோல்வியடைந்து, மீண்டும் கொழும்பு நகரில் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றது.

அமெரிக்கா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளிடம் இருந்து இராணுவ உதவிகள், ஆலோசகர்களைப் பெற்றும் J.R. அரசினால் ஒடுக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களையோ, விடுதலை இபக்கங்களையோ அடக்கியொடுக்க முடியவில்லை. இந் நிலையில் எழுச்சியடைந்த மக்களையும், 'விடுதலை இயக்கங்களையும் மந்த நிலைக்குக் கொண்டு வர, அவர்களின் போர்க் குணம்சத்தை மழுங்கடிக்க பேச்சுவார்த்தை மூலம் சமரசத்திற்கு வருவதே J.R.இன் அரசுக்குள்ள ஒரே ஒரு வழியாகும். இருப்பினும் ஒரு இராணுவத் தீர்வுக்கான தயாரிப்புகளையும் இன்று வரை J.R. அரசு செய்தவண்ணமே இருக்கின்றது.

J.R. இன் U. N. P. அரசானது பதவிக்கு வந்தபின்னர் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் வந்துள்ளது. இன்று ஒடுக்குமுறையானது மிக உச்சக்கட்டத்தை அடைந்து இன் அழித்தொழிப்பாக நடைபெற்று வருகின்றது. அரச ஒடுக்குமுறையானது உச்சக்கட்டத்தை அடைந்த அளவுக்கு ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் சகல பரிமாணங்களிலும் - சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார-வளர்ச்சியடையவில்லை. தமிழ் மக்களும் இன்றும் கூடப் பார்வையாளராகவே உள்ளனர். போராட்டத்தை அடுத்த கட்டம் நோக்கி பல்வேறு தளங்களிலும் வளர்த்து முன்னெடுத்து செல்ல எந்த ஒரு விடுதலை இயக்கத்திடமும் திட்டங்கள் இல்லை. இதனால் போராட்டமானது ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது.

மேற்கூறியவற்றின் காரணமாகவும், இராணுவ ஒடுக்குமுறையினால் விளைந்த இழப்புகளின் காரணமாகவும், விடுதலை இயக்கங்களின் மோதல்கள், அராஜகங்கள் காரணமாகவும் (அண்மையில் நடந்த LTTE-TELO மோதல் தமிழ் மக்களிடையே விடுதலை இயக்கங்கள் மீதான ஒரு அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.) தமிழ் மக்கள் பெரிதும் நம்பியிருந்த இந்தியாவின் நிலைப்பாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமரசத் தீர்வு ஏற்படுவதைக் காண தமிழ் மக்களிடையே ஒரு ஆவலை உருவாக்கியுள்ளது.

யாழ் குடா நாட்டு மக்களைப் பொறுத்தவரை இராணுவ ஒடுக்குமுறையில் இருந்து விடுபட்டால் போதும் என்ற மனநிலையே காணப்படுகின்றது. ஆனால் தமிழீழத்தின்

பயணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனைய பிரதேசங்களில் (குறிப்பாக கரையோர எல்லைப்புறப் பிரதேசங்கள்) அரசினால் திட்டமிடப்பட்டு நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், ஏற்கனவே குடியேற்றப்பட்ட குடியேற்ற திட்டங்கள் இருப்பதினால் அப்பகுதி மக்களின் பிரச்சினை இராணுவ ஒடுக்குமுறையுடன் மட்டும் நிற்கவில்லை. அப்பகுதி மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் குடியேற்ற திட்டங்கள் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவது அவசியமாகும். ஆனால் குடியேற்ற திட்டங்கள் பற்றிய ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்த J. R. அரசு பிடிவாதமாக மறுத்து வருகின்றது.

முன்னர் பிரதேச சபைகளுக்கான பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதை எதிர்த்து அப்போது எதிர்க்கட்சியில் இருந்த J. R. ஜெயவர்த்தன கொழும்பிலிருந்து கண்டிக்கு பாதயாத்திரை சென்றதை யாரும் மறந்துவிட முடியாது. இன்று அதே J. R. ஜெயவர்த்தன மகாண சபை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முனைகின்றார். இதில் இருந்தே J.R. அரசு தமிழ் மக்களுக்கு வழங்கப் போகின்ற உரிமைகளைப் புரிந்து கொள்ளலாம். பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என நாம் கருதினால் அது எம் மிகத் தவறான கணிப்பீடு அன்றி வேறல்ல.

எனவே, நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். மாறிமாறி பதவிக்கு வந்த UNP அரசும், SLFP அரசும் இனவாதத்தின் மீதே தமது இருப்பைக் கொண்டுள்ளன. இக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது இருப்புக்காக இனப்பிரச்சினையை திட்டமிட்டு வளர்த்து வந்துள்ளன. 30 ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களை நாம் சந்தித்துள்ளோம்.

சூழல்கள் மாறும் போது போராட்டத் தந்திரங்களும் மாறுபடலாம். அதைப் புரிந்து கொண்டு சரியான அரசியல் வழிமுறையையும், போராட்டத்தை முன்னெடுக்க ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தை உருவாக்குவதும் இன்று எம் முன்னுள்ள பணியாகும். இப் புரட்சிகர ஸ்தாபனத்தின் பின்னால் தேச மக்கள் அனைவரும் ஓரணி திரண்டு சுதந்திரத்திற்காக போராட வேண்டியது அவசியமாகும். இது ஒன்றே இழந்த எமது உரிமைகளை வென்றெடுக்க உள்ள ஒரே ஒரு வழியாகும்.

போராடிப் பெறுவதே சுதந்திரம்! □

---

*சரித்திரத்தின் சக்கரங்கள் நிற்பதில்லை.*
*சிறைவாசம், மரண தண்டனை அல்லது*
*எவ்வித அழிவு வேலையின் மூலம்*
*அதை நிறுத்துவதில் யாராலும் வெற்றிபெற முடியாது.*
*சரித்திரத்தின் சக்கரங்கள் சுழன்று கொண்டிருக்கிறது.*
*அது கம்யூனிஸத்தின் இறுதி வெற்றியை நோக்கிச்*
*சுழன்று கொண்டேயிருக்கும்.*

- டிமிற்றோவ் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயக்கங்களை விட்டு வெளியேறிய போராளிகளுக்கு

1983 ஜூலைக் கலவரத்தை தொடர்ந்து அலை அலையாக ஒடுக்குமுறைக் கெதிராகப் போராட உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் வந்த இளைஞர்கள் இன்று நம்பிக்கை இழந்து போர்க் குணும்சம் இழந்து எதிலும் பற்றற்றவர்களாக இயக்கங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

தமது இளமைக் கால வாழ்வின் பெரும் பகுதியை வீணுக்கி விட்டோமே என பலரும் கவலை கொள்வதை இன்று காணக் கூடியதாக உள்ளது. இளமைக்கால வாழ்வில் ஏற்படும் சாதாரண சந்தோசங்களை தியாகம் செய்து ஒரு புதிய சமுதாயத்தை படைக்கப் புறப்பட்ட எமது இளைய சந்ததியினர் இவ்வாறு வீணே செல்வது, சீரழிவது மிகவும் வேதனைக்குரியது. ஒவ்வொரு விடுதலைப் போராளிகளினதும் தியாகம், விடுதலை உணர்வு என்பன மதிக்கப்பட வேண்டியவை. அவை தன்னலமற்றவை.

போராளிகளின் தியாகங்கள் யாவும் பலனற்று, செய்த வேலைகள் யாவும் விழலிற்கு இறைத்த நீர் போல் செல்ல என்ன காரணம்?

போராளிகளே இதற்கான காரணங்களை கண்டு கொள்ளுங்கள்!

கடந்த காலங்களில் பாராளுமன்ற தலைமையை நம்பி, பார்வையாளர்களாய் இருந்த மக்கள், ஒடுக்குமுறை நாளுக்கு நாள் அதிகரித்து உயிர் வாழ்க்கைக்கே உத்தரவாதமற்ற நிலை உருவாகியதை 1977 ஆகஸ்டில் கண்களூடாகப் பார்த்தும் 1983 ஜூலைக் கலவரத்தின் பின்பே கூட்டணித் தலைமையின் இயலாமையைப் புரிந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை உணர்ந்து விடுதலை இயக்கங்களை நோக்கி பெருமளவில் இளைஞர்கள் வந்தனர். ஆனுல் விடுதலை இயக்கங்களிடம் சரியான திட்டம் இருக்கவில்லை. வேலை முறை இருக்கவில்லை. பெருமளவில் இயக்கங்களை நோக்கி வந்த இளைஞர்களை என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடின. பின்னர் பயிற்சிக்காக இப் போராளிகளை தமிழ் நாட்டிற்கு அனுப்பிவைத்தனர்.

இத் திடீர் வளர்ச்சியை தாங்கிக் கொள்ள விடுதலை இயக்கங்களிடம் போதிய அரசியல் பலமோ, ஸ்தாபன பலமோ இருக்கவில்லை. ஒரு சில மாதங்களில் தாய் நாட்டுக்கு திரும்பலாம் என நம்பிக்கையுடன் பயிற்சிக்காக தமிழகம் சென்ற போராளிகள் பல மாதங்களாக பயிற்சி முகாம்களில் அடைக்கப்பட்டார்கள்.

பல விடுதலை இயக்கங்களின் பயிற்சி முகாம்களில் சித்திரவதை முகாம்களும் கூடவே இருந்தன. போராட்டம் பற்றியோ தலைமையின் தவறுன போக்குகள் பற்றியோ கேள்விகள் எழுப்பிய பல தோழர்கள் சித்திரவதை முகாம்களில் உளவாளி என்றும், துரோகிகள் என்றும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் அடி உதை வாங்கினர். விடுதலைப் போராட்டத் தலைமைகள் (இயக்கத் தலைமைகள்) இயக்கத்திற்குள் உருவாகும் பிரச்சினைகளை கையாளுவதற்குரிய ஆளுமை இல்லாது இருந்ததனுல் கேள்வி எழுப்பியவர்களை சந்தேகக் கண்ணுடனே நோக்கின. இதனுல் விடுதலைப் போராளிகள் தலைமையை நோக்கி கேள்வி கேட்கவோ அஞ்சினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையின் அராஜகம் பற்றியோ, தம்முடன் ஒன்ருக இருந்த தோழர்கள் கொலை செய்யப்படுதலையோ கண்டும் காணுது இருந்தனர். பலர் சிறைக்கைதிகள் போல் விடுதலை இயக்க முகாம்களில் காவலில் பல மாதக் கணக்கில் வைக்கப்பட்டனர்.

சில விடுதலை இயக்கங்கள் திட்டமற்று முகாம்களை தொடங்கியதாலும், அடுத்த கட்டம் பற்றிய தெளிவின்மையாலும் முகாம்களிலே இயக்கப்போராளிகளை வைத்திருந்தன. இதை நியாயப்படுத்த பெரிய படையைக் கட்டி திடீரென தாக்குதல் தொடுத்து வெற்றி கொள்வது எனும் கற்பனு ரீதியிலான காரணத்தைக் கூறின. இதற்காக பயிற்சி என்ற போர்வையில் போராளிகளுக்கு அளவுக்கதிகமான உடற் பயிற்சியைக் கொடுத்தன.

இயக்கத் தலைமைகளை நோக்கி கேள்வி கேட்க அஞ்சிய போராளிகள் தலைமை எதைக் கூறினலும் தலையசைக்கும் மந்தைக் கூட்டமாகவே இருந்தனர். இயக்கத் தலைமைக் கெதிராக கருத்துத் தெரிவிப்பவர்களை கண்டறிய உளவு ஸ்தாபனங்கள் பயன்படுத்தப்பட்டன. இயக்கத்திற்குள்ளேயே உளவறியும் நவீன உத்தியை உலகின் வேறெந்த நாட்டு விடுதலை இயக்கங்களுக்குள்ளும் இந்த அளவிற்குக் காண முடியாது.

இவை யாவும் சேர்ந்து போராளிகளை இயக்கங்களை விட்டும் ஒளித்து ஓட வைக்கின்றன. (இயக்கத் தலைமைக்கு தெரியக் கூடியதாக வெளியேறியவர்கள், வெளியேற முற்பட்டவர்கள் கொலை செய்யப்படுவதால் இயக்கங்களை விட்டு வெளியேறுபவர்கள் ஒளித்து ஓடுவது என்பது தவிர்க்க முடியாததாகின்றது.)

போராளிகள் இயக்கங்களை விட்டு வெளியேறுவதைச் சுருக்கமாகக் கூறினல் அவை யாவன: இயக்கங்களின் அராஜகம், ஜனநாயக மத்தியத்துவம் இன்மை, இயக்கத்தின் கொள்கைகள் நடைமுறைகள் என் பங்கற்ற தீர்மானிப்பதில் கீழணிகளுக்கு எதுவித பங்குமின்மை, குறுகிய காலத்தில் விடுதலை கிடைத்துவிடும். என்ற எதிர்பார்ப்பு வீண் போனமை என்பனவாகும். இயக்கங்களில் இருந்து வெளியேறியுள்ள பலர் இன்று இந்தியாவின் அகதிகள் முகாம்களிலும், ஐரோப்பிய நாடுகளின் அகதிகள் முகாம்களிலும், கேரளாவின் தேனீர்க் கடைகளிலும், பண்ணையார் வீடுகளிலும் உள்ளனர். இன்னும் சிலர் வெளிநாடுகளுக்கு போதை வஸ்து கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, விடுதலை இயக்கங்களை விட்டு வெளியேறி பல்வேறு இடங்களிலும் உள்ள போராளிகளே!

பல்வேறு சிக்கல்கள் மத்தியில் சென்ற எமது போராட்டம் இன்று ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது. இத்தேக்கம் நிரந்தரமானதல்ல. இத்தேக்கத்தை திருப்புமுனையாக்க, இதற்கான காரணகர்த்தாக்களை இனம் கண்டு தூக்கியெறியுங்கள்.

கடந்த காலத்தில் உங்களுடன் ஒன்ருக இருந்து களத்திலும் இயக்க மோதல்களிலும், இயக்கங்களுக்குள் நடந்த உள் படுகொலைகளிலும் மரணித்தார்கள். அப்போராளிகளின் இலட்சியமான தமிழ் மக்களின் நல்வாழ்விற்காக போராடுவதே நீங்கள் அவர்களுக்கு செய்யும் அஞ்சலியாகும். இதுவே இன்றைய உங்கள் சமூகப் பங்களிப்புமாகும்.

தோழர்களே!

சரியான அரசியல் மார்க்கத்தை பின்பற்றுவோம்!
மக்களிடம் செல்வோம்!
மக்கள் அமைப்புகளை உருவாக்குவோம்!
மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம்!

என உறுதி பூண்டு கொள்ளுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியற் குறிப்புகள்

## 1. குருநகர் மீனவர் படுகொலை – கடல் வலயத் தடைச் சட்டத்தின் உச்சக்கட்டம்

1985 தை மாதம் தமிழீழம் அமைப்போம் என்றும் 1985 தைப்பொங்கல் தமிழீழத்திலேயே கொண்டாடுவோம் என தமிழீழ விடுதலைப் போராளிகளால் ஒரு குழந்தைப் பிள்ளைத் தனமான அறிக்கை விடப்பட்டது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. இதையடுத்து சிறீலங்கா இனவெறி அரசானது தமிழ் நாட்டில் இருந்து இயங்கி வரும் விடுதலைப் போராளிகள் நாட்டினுள் நுழையாமல் தடுக்கும் ஒரு வழியாக கடல் வலயத் தடைச்சட்டத்தை பிரகடனப்படுத்தியது. இக் கடல் வலயத் தடைச் சட்டம் பின்னல் நீக்கப்பட்டாலும் இப்பொழுது மீண்டும் இச் சட்டம் கொண்டு வரப்பட்டதோடு, முன்பிருந்த தடைச்சட்டத்தை விட மேலும் ஒரு படி மேலே போயுள்ளது. இதன்படி கடலேரிகளில் கூட மீனவர்கள் மீன் பிடிக்க முடியாது தடை செய்யப்பட்டுள்ளது. அண்மையில் குருநகரில் இருந்து கடலில் தொழில் செய்ய மண்டைதீவுக்கு சென்ற 34 மீனவர்கள் கடலில் வைத்து கொடூரமாக கருப்புச் சட்டைக்காரர்களினுல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொடூரக் கொலைகள் தமிழீழம் வாழ் மீனவர்கள் மீதான ஒடுக்குமுறையில் ஒரு உச்சக்கட்டமாக திகழ்கிறது. ஜனவரி 85க்கு பின் தமிழீழத்தில் இருந்த இந்தியாவுக்கு அகதிகளாக பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் இதுவரை வெளியேறியுள்ளன. புதிய கடல் வலயத் தடைச் சட்டத்தின் பின் மீண்டும் அகதிகளாக பல மீனவக் குடும்பங்கள் இந்தியாவுக்கு செல்கின்றன. தமிழீழப் பிரதேசத்தில் உயிர் வாழ முடியாது எனக் கருதும் இக் குடும்பங்கள் இந்தியாவில் தாம் உயிர் வாழலாம் என்ற எண்ணத்துடனேயே வருகின்றனர். ஆனல் அங்கும் இவர்கள் அகதி முகாம்களில் பல கஷ்டங்களுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். தமிழீழப் பிரதேசத்தில் ஏற்பட்ட கொடுமைகளால் இந்தியாவுக்கு சென்ற இவர்கள் அங்கும் பல கஷ்டங்களை வேறு பல வழிகளில் அனுபவிக்கின்றனர்.

அப்படியாயின் மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு தான் என்ன எனப் பலர் கேட்கலாம். இதற்கு ஒரே பதில் நமது சொந்த மண்ணில் தங்கி நின்று எமது விடுதலைக்காகப் போராடுவதே என்பதாகும். தமிழீழத்தின் கரையோரப் பிரதேசங்களைப் பொறுத்தவரை இவை நமது போராட்டத்தில் யுத்த தந்திர ரீதியாக முக்கிய பங்கு வகிப்பது தவிர்க்க முடியாத தொன்றாகும். இந்தியா எமது பின்னணிப் பிரதேசம் என்ற வகையில் பார்த்தால் இதன் முக்கியத்துவம் எமக்கு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். இன்று தமிழீழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள் எதுவுமே திட்டமிட்ட அடிப்படையில் தமது அரசியல் வேலைகளை மேற்கொள்ளாததனுல் மீனவர்கள் மத்தியிலான அரசியல் வேலையும் சரியான முறையில் மேற்கொள்ள முடியவில்லை. திட்டமிட்ட வகையில் அரசியல் வேலைகளை மேற்கொண்டு மீனவர்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருப்பின் கரையோரப் பிரதேச மக்களின் வெளியேற்றம் கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவு தவிர்க்கப்பட்டிருக்க முடியும். (இனி மேலாவது விடுதலை இயக்கங்கள் இதனைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.) ஆகவே உச்சி மீது வான் இடிந்து வீழ்ந்தாலும் எமது சொந்தப் பலத்தில் தங்கி நின்று போராடுவதே எமக்கு நிரந்தர விடிவைத் தரும். நமது மண்ணை மீட்க நாமே போராடுவோம். நமது கடல் வலயத்தில் நாமே தொழில் செய்வோம்.

## 2. விடுதலைப் போராளிகளுக்கு அஞ்சலி

அண்மைக் காலங்களில் சிறிலங்கா இனவெறி அரசின் ஒடுக்குமுறையினலும் வெறும் விபத்துக்களாலும் போராளிகளின் இறப்புக்கள் ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. ஒரு போராட்டத்தில் இறப்பென்பது தவிர்க்கமுடியாததென்பது நிதர்சனமானது. அத்துடன் இறந்த ஒவ்வொரு போராளியினதும் தியாகம் அவர் போராடிய வழிமுறை சரியோ தவரோ மதிக்கப்பட வேண்டியதுமாகும். ஆனல் அண்மைக் காலங்களில் தமிழீழப் பிரதேசத்தில் நடக்கும் ஒவ்வொரு இறப்புக்கும் ஹர்த்தால் தொடக்கம் பல்வேறு விதமான 'அலங்காரங்கள்' போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ் அலங்காரங்களுக்கென பல நூற்றுக்கணக்கான வாழை, தென்னை, பனை மரங்கள் அநியாயமாகத் தறிக்கப்பட்டு பல வருடங்களாக திருத்தப்படாது இருந்து இன்று ஓரளவுக்கேனும் திருத்தப்பட்ட சாலைகளில் கூட பாரிய குழிகளைத் தோண்டி நடப்பட்டு துக்கம் அனுஷ்டிப்பு, வீர அஞ்சலி போன்ற பெயர்களில் விஷயங்கள் நடந்தேறுகின்றன. ஆரம்பத்தில் இந்திரா காந்தியின் இறப்புடன் ஆரம்பித்த இவ் அலங்கார முறையானது இன்று தொடர்ந்தும் ஒவ்வொரு விடுதலைப் போராளியின் இறப்புக்கும் பயன்படுகிறது. இவ் அலங்கரிப்புகளை ஒரு போட்டி வடிவமாக ஒரு இயக்கம் இன்னெரு இயக்கத்திற்கெதிராக செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த அலங்கரிப்பு முறைகளில் எல்லாம் தமிழ்நாட்டு பிற்போக்கு அரசியல்வாதிகளின் வாடை அடிப்பதை நாம் இன்று காணக்கூடியதாக உள்ளது. இன்று தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இயக்கங்கள் கூடுதலாக தமிழ் நாட்டு பிற்போக்கு அரசியல்வாதிகளின் செல்வாக்குக்கு உட்பட்டு இவர்களின் பிற்போக்கு கருத்துக்களில் அமிழ்ந்திருப்பது இதற்கு ஒரு காரணமாகும். தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் பாணியில் நாம் எமது வேலைகளை மேற்கொள்வதானது உண்மையில் நாம் சரியான புரட்சிகரப் பாதையில் இருந்து வழுகி பழைய பாணியிலான பிற்போக்கு தலைமைகளின் வழியிற் செல்வதையே காட்டுகிறது. இப்படியான பிற்போக்கு தமிழ்நாட்டு கலாச்சாரப் பண்புகள் இயக்கங்கள் மத்தியிலிருந்து களைந்தெறியப்பட வேண்டும். அத்துடன் ஹர்த்தால் என்ற பெயரில் வெட்டப்படும் மரங்கள் ஒவ்வொன்றும் நமது தேசத்தின் வளங்கள் தான் என்பதை எந்தவொரு இயக்கமும் இதுவரை புரிந்து கொண்டதாய் இல்லை. நமது தேசத்தின் வளங்களை பெருக்க வேண்டிய இன்றைய கட்டத்தில் எமது தேசத்தின் வளங்களில் சில என கூறப்படும் பனை, தென்னை, வாழை மரங்களை வெட்டி அழிப்பது சமூகத்திற்கு பாதகமான செயலாகும். ஆகவே, விடுதலை இயக்கங்கள் இனி மேலாவது இம்மாதிரியான செயல்களை நிறுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறேம். இதை ஒவ்வொரு விடுதலை இயக்கமும், ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

## 3. தமிழீழப் போராட்டமும் சுய பொருளாதாரமும்

எமது தமிழீழப் போராட்டமானது ஆரம்பமுதலே ஒரு சீரான வளர்ச்சியூடாக வளராததனல் எமது போராட்டமானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றுவரை ஒரு சரியான மக்கள் போராட்ட வடிவத்தை பெற முடியவில்லை. ஆரம்பத்தில் சிறிலங்கா அரசின் அடக்கு முறை காரணமாக போராட எழுந்த இளைஞர் கோஷ்டிகள் தனிநபர் அழிப்பு, பின்னால் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை என்று பல பாய்ச்சல் கட்டங்களை தாண்டி இன்று ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது. விடுதலை இயக்கங்களிடம் மக்கள் மத்தியில் வேலைகளை எப்படி நகர்த்துவது என்ற திட்டங்கள் எதுவும் இல்லாததனால் தான்தோன்றித்தனமான பல வேலைகளை மக்கள் மத்தியில் செய்து வருகின்றனர். இன்று பல விடுதலை இயக்கங்கள் மக்கள் மத்தியில் தமது போலியான, மிகையான பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தாம் போராடுவதற்கு நவீன ஆயுதங்கள் வேண்டும் என்றும் ஏனெனில் எதிரி நவீன ஆயுதங்கள் கொண்டு வருவதால் அதை எதிர்த்துப் போரிட தமக்கும் நவீன ஆயுதங்கள் வாங்க வேண்டும் என்றும் கூறிவருகின்றனர். இதற்கு தமக்கு தொகையான பணம் வேண்டும் எனக் கூறி கோடிக்கணக்கில் வருடாவருடம் தமிழீழத்தில் இருந்து பணமாகவும் தங்கமாகவும் வசூல் செய்யப்படுகிறது. இவை போதாதென்று பல்வேறு வரிவிதிப்புக்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவ் வரிவிதிப்புக்களினாலும், பணம், நகை சேகரிப்பினாலும் சாதாரண தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறிலங்கா அரசின் சாதாரண சிவில் நிர்வாகங் கூட ஸ்தம்பித்துப் போயுள்ள இவ்வேளையில் இவ்வகையான செயல்கள் மக்களை பாரிய அளவு பாதிக்கின்றன. மக்கள் இயக்கங்களின் இச் செயல்களில் வெறுப்புற்றிருந்தாலும் தாமும் 'சுடப்படு'வோம் என்ற காரணத்தினால் வாய்மூடி மௌனிகளாகவே இருக்கின்றனர். வெறுமனே ஆயுதங்களை மட்டும் நம்பி எத்தனை ''ஆமி''க்காரர்களின் தலைகள் உருள்கின்றன அல்லது எத்தனை போட்டி இயக்கப் போராளிகளின் தலைகள் உருள்கின்றன என்பதை எண்ணுவதே இவர்களின் குறிக்கோளாக இன்றுவரை இருந்து வருகிறது. தொடர்ந்தும் எம் மத்தியில் இருக்கும் இயக்கங்களின் தவறான போராட்ட முறையானது தொடருமாயின் பெரும்பான்மை மக்களின் வெறுப்பை சம்பாதிப்பதும், விடுதலை மீதான நம்பிக்கையீனம் வளர்வதும் தவிர்க்க முடியாதது. இன்று பேச்சுவார்த்தை மூலம் ஏதேனும் தீர்வு வராதா என மக்கள் ஏங்குவதற்கு இயக்கங்களின் இம் மாதிரியான நடவடிக்கைகளும் காரணமாகும்.

இம்மாதிரியான இயக்கங்களின் நடவடிக்கைகளுக்கு உண்மையில் சரியான சுய பொருளாதாரத் திட்டமின்மையே காரணமாகும். தவிர்க்க முடியாது எமது போராட்டத்தில் ஏற்பட்ட பாய்ச்சலும், இன்று பாய்ச்சலின் காரணமாக ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தம் போன்ற நிலைமை, மக்கள் படிப்படியாக போராட்டத்தில் ஈடுபடுத்தப்படாது வலிந்து இழுக்கப்பட்ட விதம் போன்றவை உண்மையிலேயே மக்கள், போராட்டத்தின் தாற்பரியத்தை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இன்று உள்நாட்டு யுத்தம் போன்ற நிலை நாட்டில் ஏற்பட்டிருந்தாலும் ஒரு உள்நாட்டு யுத்த காலக்கட்டத்தில் எப்படியான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது, எப்படி நமது மக்களை பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றுவது, எப்படி போராட்டத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவது போன்ற திட்டங்கள் எதுவும் இயக்கங்களிடம் இல்லை.

இந் நிலை போதாதென்று இயக்கங்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை முகாம்களில் வைத்திருப்பதால் இவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவு ஒவ்வொரு நாளும் தேவைப்படுகிறது. இதன் காரணமாக தங்க நகைகள் சேர்த்தல், வரி விதித்தல் போன்ற பல நடவடிக்கைளை இயக்கங்கள் மேற்கொள்கின்றன.

எமது போராட்டமானது தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாயின் சரியான சுய பொருளாதார அடிப்படையிலான ஒரு திட்டம் அவசியமானதாகும். இல்லாவிடின் எம்மால் பலமான எதிரிக்கெதிராக ஒரு விட்டுக்கொடுக்காத போராட்டத்தை நடத்தமுடியாது போய் விடும். தமிழீழத்தில் விவசாயப் பிரதேசமும், மீன்பிடிப் பிரதேசமும் முக்கியமானது என்ற வகையில் திட்டமிட்ட அடிப்படையில் விவசாய, மீன்பிடிப் பிரதேச வேலைகளை மேற்கொள்வது அவசியமானது. இல்லாவிடின் இயக்கங்களின் வரிவிதிப்பு நடவடிக்கையானது மக்கள் மத்தியில் இருந்து இயக்கங்களை அந்நியப்படுத்தவும், போராட்டம் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படவுமே செய்யும். ஆகவே எமது மக்கள் மத்தியிலான வேலையானது யுத்த காலத்தில் ஒரு சுய பொருளாதார உற்பத்தியை கட்டி எழுப்புவதையும் உள்ளடக்கியதாக, மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்திலும் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

## 4. TELO - LTTE மோதல் விடுதலைப் போராட்டத்தில் கறைபடிந்த சம்பவம்

எமது மக்கள் மீது சிறிலங்கா அரசு மிகக்கொடுமையான யுத்தத்தை ஏவிவிட்ட பின்பும் கூட நாம் பொது நோக்கில் ஐக்கியப்படாது பிளவுண்டு எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை புரியாது எம்மை நாமே அழித்துக் கொண்ட வரலாற்றை படைத்துள்ளோம். இதுவரை நடந்த சகல மோதல்களிற்கும் சிகரம் வைத்தாற் போல் அண்மைய LTTE-TELO மோதல் அமைந்துள்ளது. இயக்கங்களிடையேயான மோதல் திடீரென ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. எமது சமூகத்தில் நிலவும் தன்மைகளான போட்டி, பொறுமை, காழ்ப்புணர்ச்சி, தெருச் சண்டித்தனம் என்பன இயக்கங்களில் ஆரம்பத்திலிருந்தே பிரதிபலித்தன. தனிமனிதனின் அரசியல் சுதந்திரத்தை அங்கீகரிக்காமை, ஏனைய இயக்கங்களின் இருப்பை ஜீரணிக்க முடியாமை மற்றும் கோஷ்டி வாதம் என்பன தமிழீழப் போராட்டத்தில் இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் நலனின் அடிப்படையில் பொது எதிரிக்கெதிராக ஐக்கியப்பட்டு போராடுவதற்கு பதில் தமது குழு நலனின் அடிப்படையில் ஒருவரை ஒருவர் அழிப்பதில் அக்கறையாயிருந்ததை யாரும் மறுக்க முடியாது. இது மட்டுமல்ல, இரண்டு இயக்கங்கள் மோதினால் அதில் லாபம் தேடுவதையே சில இயக்கங்கள் நடைமுறையாகக் கொண்டன. இயக்கங்களின் கூட்டமைப்பான ஈழ தேசிய விடுதலை முன்னணியில் இருந்த இரு இயக்கங்களிடையே மோதல் வரும் போது ஏனையவை இதனை சுமுகமான முறையில் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவோ, தவறினைச் சுட்டிக் காட்டவோ திராணியற்று இருந்தன. தமிழீழத்தில் கொலைகள், கொள்ளை, வழிப்பறி, கற்பழிப்பு போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் மேலோங்க இயக்கங்களே முக்கிய காரணம். இது போன்ற நடவடிக்கைகள் சில இயக்கங்களினாலேயே செய்யப்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது. சில சமூக விரோதிகளிற்கு இயக்கங்கள் தண்டனை வழங்கினாலும் சமூக விரோதச் செயல்கள் தொடர்ந்தன. இயக்கங்கள் வெவ்வேறு அளவுகளில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டன. அப்படியான சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் பொழுது எதுவும் தெரிவிக்காது இருந்துவிட்டு இன்று ஒரு இயக்கத்தை மற்றொரு இயக்கம் சமூக விரோதிகள் என முத்திரை குத்துவதை என்னவென்று சொல்வது? ஈழ தேசிய விடுதலை முன்னணியில் உறுப்பினர்களாக LTTE-TELO இரண்டுமே இருந்தன. தமக்கிடையேயுள்ள பிரச்சினை பேசித் தீர்க்க முடியாதளவிற்கு நிலைமை உருவானதெனின் ENLF பற்றி, பலவித கேள்விகள் எழுகின்றன. மக்கள் நலன் அடிப்படையில் இது கட்டப்பட்டதா? அல்லது வேறு குறுகிய நோக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டப்பட்டதா? இதில் உள்ள ஏனைய இயக் கங்கள் இவ்விடயத்தில் நேர்மையாக நடந்து கொண்டனவா என்பன பற்றி ஆராய வேண்டும்.

TELOவினர் LTTE தோழர் ஒருவரைக் கடத்தியதுடன் TELO-LTTE மோதல் ஆரம்பமானது. இப்பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்குப் பதில் இரண்டு பகுதியினருமே முரண்பட்டு நின்றனர். இது பல போராளிகளின் அழிவிற்கு வழிகோலியது. எதுவிதமான மனிதாபிமானமுமற்ற முறையில் பலர் கோரமாக படுகொலை செய்யப்பட்டு சந்திகளில் கொளுத்தப்பட்டனர். யுத்த தர்மத்திற்கே இழுக்கு தரும் வகையில் பலர் சரணடைந்த பின்னரும் கூட சுட்டுக் கொல்லப்பட்டனர். பொது மக்கள் தமது கருத்தைக் கூட தெரிவிக்க அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது. நாம் அடக்குமுறைக்கெதிராக போராடப் புறப்பட்டு மீண்டும் இன்னொரு அடக்குமுறைக்கு ஆளாவதா? இன்று பல இயக்கங்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளை தடுப்பதென்பதும் தமக்கு மாறுபட்ட அரசியல் கருத்தை உடையவர்களின் அரசியல் உரிமையை மறுப்பதென்பதும் வெவ்வேறானவை. TELO இயக்கத்தில் இறந்தவர்களில் யாழ் மாவட்டத்தை விட வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களே அதிகம். இது வேண்டுமென்றே செய்யப்பட்டதாக பலராலும் சொல்லப்படுகின்றது. உண்மை அப்படியல்ல. யாழ் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பரிச்சயப்பட்ட இடமாகையால் ஓடி ஒளிந்துவிட்டார்கள். ஏனையோர் மாட்டிக் கொண்டார்கள். பல போராளிகளை பலிகொண்ட இந் நடவடிக்கை மிக மோசமானதும் விடுதலைப் போராட்டத்திற்கு ஊறு விளைவிப்பதுமாகும். நாம் இந் நடவடிக்கையைக் கண்டிப்பதோடு இறந்த போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். □

---

*இளமையோடு இருக்கும் வரை ஆற்றல் உள்ள வரை*
*சுதந்திரத்திற்காக நாம் போராடுவோம்.*

*போராடுவோம்;*
*இரத்தம் சிந்துவோம்;*
*எதிரியின் முன்னால் தளர்வின்றி முன்னேறுவோம்;*
*எதிரிக்கு இறுதி முடிவு ஏற்படும்வரை ஓயமாட்டோம்.*

*வாழ்நாள் முழுதும்*
*( இந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பை எதிர்த்து )*
*போராடவே நான் விரும்புகிறேன்.*
*இனி போராட முடியாது எனும் நிலை வந்துவிட்டால்,*
*அந்த வினாடியே இறந்துவிட விரும்புகிறேன்.*

**- ஏங்கெல்ஸ் -**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிலிப்பைன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் செயல் திட்டம்

## மக்கள் போரும் தேசிய ஜனநாயக முன்னணியும்

நாலரை நூற்றுண்டுகளுக்கும் மேலாக பிலிப்பைன்ஸ் தீவுகளின் மக்கள், அந்நிய ஆக்கிரமிப்பிற்கும் ஆதிக்கத்துக்கும் எதிராக சுதந்திரப் போராட்டம் நடத்தி வருகிருர்கள். லாபு-லாபு[1], முதல் தாகோ ஹாய்[2], சுல்தான் குடாரத்[3] வரை; தீகோ, கப்ரீலர் சிலாங்[4] முதல் ஆந்திரேஸ்போனிபாசியோ[5] கட்டிபூனான்[6] வரை; மகாரியோ சகாய்[7] முதல், நமது சமவெளிகளிலும், மலையகங்களிலும் போராடி வரும் இன்றைய புரட்சிக் கெரில்லாக்கள் வரை - நமது வரலாறு முழுவதும் போராட்டத்தின் வரலாருகவே இருக்கிறது. சமூக, தனிமனித சுதந்திரத்துக்காகவும், சமுதாய விமோசனத்துக்காகவும், தேசிய சுதந்திரத்திற்காகவும் கடினமான போராட்டம் நடத்திய வரலாறு நம் வரலாறு. அந்நிய ஒடுக்குமுறையாளர்கள், அவர்களின் உள்நாட்டுக் கைக்கூலிகள் ஆகியோரின் வன்முறைகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக நமது மக்களின் மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் தம் கரங்களில் ஆயுதமேந்திகிளர்ந்து எழுந்த காலகட்டங்கள் தாம், நமது வரலாற்றின் பக்கங்களில் மிகவும் புகழ் வாய்ந்த பக்கங்களாகும்.

நமது வரலாறு ஆயுதமேந்திய புரட்சிப் போராட்டத்தின் வீரஞ்செறிந்த மரபைக் கொண்ட வரலாருகும். இதுபற்றி நாம் நியாயமாகவே பெருமைப்பட்டுக் கொள்ளலாம். தற்காப்புக்காகவும் ஸ்பானியக் காலனிய நுகத்தடியைத் தூக்கியெறிவதற்காகவும் நமது முன்னேர் நூற்றுக்கணக்கான எழுச்சிகளும், கிளர்ச்சிகளும் நடத்தினர். ஐரோப்பியக் காலனிய ஆட்சியைத் தூக்கியெறிவதற்காக ஆசியாவின் நமது பகுதியில் முதல் புரட்சிகர மக்கள் போரை வெற்றிகரமாக நடத்தியவர்கள் நமது மக்கள். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஏறக்குறைய நான்காண்டுகள் நாம் வெற்றிகரமான கெரில்லாப் போர் நடத்தினேம். கிழக்குலகின் முதலாவதும் சொற்பகாலமே ஜீவித்ததுமான தம் ஜனநாயகக் குடியரசைக் காப்பதற்காக இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் தொடர்ச்சியாகப் பத்தாண்டுகள் நமது மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத் துருப்புகளுக்கு எதிராக தேசிய விடுதலைப் போராட்டம் நடத்தினுர்கள். இப்போரில் அவர்கள் மிகுந்த தீரத்துடன் ஈடுபட்டு பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

இந்த வரலாற்றுமரபு இன்னமும் மடிந்துவிடவில்லை. தாய்நாட்டைக் காப்பதற்காகவும் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காகவும் ஆயுதப்போராட்டம் நடத்தும் நம்மரபு இன்றும் உயிரோடேயே இருக்கிறது. இதற்கு, எல்லார்க்கும் தெரிந்த ஒரு காரணம் உண்டு - அந்நிய ஆண்டானுகிய அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்றும் பிலிப்பைன்ஸில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. உள்நாட்டில் உள்ள அதன் பெரிய, சிறிய கூட்டாளிகளும், பொம்மை சர்வாதிகாரிகளும் இன்றும் நம் நாட்டில் தீமையை மும்

---

1-7: பிலிப்பைன்ஸ் மக்களின் கடந்த காலப் போராட்டங்களில் ஈடுபட்ட முக்கிய வீரர்கள்.

[மொழி பெயர்ப்பாளர்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரமாக விதைத்து வருகிருர்கள். சர்வாதிகாரி பெர்டினுன்ட் மார்க்கோஸ் இந்தக் கும்பலுக்குத் தலைமை தாங்குகிருன். இவர்கள் நம்நாட்டில் அந்நிய ஆதிக்கம் தொடர்ந்து நீடிப்பதற்கும், பிலிப்பைன்ஸ் மக்கள் மீதான ஒடுக்கு முறையும் சுரண்டலும் மேலும் கடுமையாவதற்கும் துணைபோய் வருகிருர்கள்.

1972 செப்டம்பர் அந்நிய சக்திகளும் அவர்களின் தரகுக் கூட்டாளிகளும் பெரும் நிலப்பிரபுக்களும் அதிகார வர்க்க முதலாளிகளும் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருகிற பிலிப்பைன்சின் அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ அமைப்பின், அரசியல் பொருளாதாரத்தில் மிகக்கடுமையான நெருக்கடி ஏற்பட்டது. அப்போது மார்க்கோஸ் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையுடன் பாசிச ராணுவ ஆட்சியைத் திணித்தது.

அமெரிக்காவின் ஆதரவு பெற்ற மார்க்கோசின் சர்வாதிகார ஆட்சி, வெளிப்படையான ஆயுதபலம் மூலமும் பயங்கர நடவடிக்கைகள் மூலமும் பத்தாண்டுகளுக்கும் மேலாக அரசதிகாரத்தைத் தனது ஏகபோகமாக வைத்துக்கொண்டுள்ளது. இராணுவ ஆட்சியைத் திணித்து, மக்களாட்சி மற்றும் ஜனநாயக நடைமுறைகளை அடையாளம் தெரியாத அளவிற்கு அழித்தொழித்து விட்டது, அல்லது கறைப்படுத்தி விட்டது. இதனுல் அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ பிலிப்பைன்ஸ் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் பெருகிப்போயுள்ளன; நம்மக்களுக்குச் சொல்லொண்ணுத் துன்பதுயரங்களை ஏற்படுத்தியுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியமும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவமும் அதிகாரவர்க்க முதலாளியமும் நம் சமுதாயத்தைத் தொடர்ந்து பீடித்துள்ள மூன்று சனியன்களாகும். மார்க்கோசின் சர்வாதிகார ஆட்சிமூலம் இம்மூன்றும் மக்களை மென்மேலும் ஒடுக்குவனவாகவும் சுரண்டுவனவாகவும் மாறியுள்ளன. சர்வாதிகார ஆட்சியோ இக்கால கட்டத்தில் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்குச் சாதகமான அரசாங்க வடிவமாக 'நெருக்கடியைச் சமாளிக்கும் குழுவாகவும்' செயல்படுகிறது.

அப்பாவி உழவர்களையும் தொழிலாளர்களையும் படுகொலை செய்தல்; பட்டிகளில் சேர்த்தடைத்தல்; தன்னிச்சையான கைதுகளிலும் வீடுகளில் புகுந்து சோதனை போடுவதிலும் ஈடுபடுதல்; புரட்சியாளர்களைக் காலவரையறையின்றிக் காவலில் வைத்தல்; சித்திரவதை செய்தல்; 'நல்வழிப்படுத்துகிறோம்' என்ற பெயரில், ஆட்சிக்கவிழ்ப்பில் ஈடுபடுகிறவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் ஒழித்துக் கட்டுதல்; நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் மக்கள் கூட்டத்தை வன்முறையால் கலைத்தல்; நகர்ப்புறத்து ஏழைமக்களையும் சிறுபான்மை இனத்தவரையும் வலுக்கட்டாயமாக இடம்பெயர்த்தல்; செய்தி-தொடர்புச் சாதனங்களை ஏகபோகமாக்கி தனக்குச் சாதகமாகக் கட்டுப்படுத்தல்; உண்மையை ஒடுக்குதல்; பொய்மையைப் பரப்புதல்; இன்று இதுபோன்ற ஆயிரத்தெட்டு வகையில் அடிப்படையான மனித உரிமைகளையும் குடியுரிமைகளையும் மீறுதல் இதுதான் சர்வாதிகார ஆட்சியிலே நமது அன்ருட நிலைமையாயிருக்கிறது.

கடுமையான பணவீக்கம், அதிகரித்துச் செல்லும் வேலையில்லாத் திண்டாட்டம், அத்தியாவசியப் பண்டங்களின் பற்ருக்குறை நிலை, அச்சுறுத்தும் வறுமை, நிதியாதாரம் வறண்டுபோதல், மூலதன வெளியேற்றம், வெளிநாட்டு வணிகத்தில் கூடிவரும் பாதகநிலை, பிரமாண்டமான அளவில் அந்நியக்கடன் (இது அடுத்த இரு தலைமுறைகளுக்குத் தேசமுழுவதையும் அந்நியரிடம் அடகு வைத்திருக்கிறது) இவை அமெரிக்க - மார்க்கோஸ் சர்வாதிகார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சி, பிலிப்பைன்ஸ் மக்கள்மீது சுமத்தியிருக்கும் பொருளாதாரச் சுமைகளாகும்.

சென்ற நூற்றுண்டில் ஜோஸ் ரிசாலைக் கொலைசெய்ததும் அது சமுதாயத்தின்மேல் ஏற்படுத்திய அரசியல் தாக்கமும் போலவே 1983 ஆகஸ்டில் சர்வாதிகார ஆட்சியானது எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் பெனிக்கோ அக்குவினே ஜுனியரை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துப் படுகொலை செய்தது. இது பிலிப்பைன்ஸ் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா வர்க்கத்தையும் சேர்ந்த மக்களிடையிலும் மீண்டும் விழிப்புணர்வைத் தூண்டிவிட்டது. பத்தாண்டுகளுக்கும் மேலாக சர்வாதிகார ஆட்சி தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அரசியல் படுகொலைகளை இந்த நிகழ்ச்சி அடிக்கோடிட்டுக் காட்டியது. மேலும் அமெரிக்க - மார்க்கோஸ் பாசிச ஆட்சியின் முழுக் கையாலாகாத் தனத்தை தேசிய, சர்வதேசிய கவனத்துக்குக் கொணரவும் அது உதவியது.

1983 இன் பின்மாதங்களிலிருந்து சமுதாயத்தின் நடுத்தர வர்க்கங்களிலிருந்து ஆயிரக்கணக்கானவர்களும், மேல்தட்டைச் சேர்ந்த பாசிச எதிர்ப்பு வட்டாரங்களிலிருந்து கணிசமானவர்களும், லட்சக்கணக்கான தொழிலாள மக்களோடும் புரட்சி மாணவர்களோடும் ஒன்று சேர்ந்துகொண்டார்கள். முன்பு ஒருபோதும் கண்டிரா அளவில் மிகப்பெரியதொரு ஆர்ப்பாட்டங்களிலும் பலவிதமான எதிர்ப்புக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்கள். இவர்கள் அனைவரும் அமெரிக்கச் சார்பான பாசிசச் சர்வாதிகாரத்தை உடனடியாக அகற்றுமாறு கோரினுர்கள்.

மிகப்பெரும்பான்மையான நமது மக்கள் விழிப்படைந்தனர். சர்வாதிகாரத்துக்கு முடிவுகட்டவேண்டுமென வலியுறுத்தினர். நமது பிரச்சினையின் அடிப்படைக் காரணங்கள் யாவை என்பது, குறிப்பாக நடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதிகரித்துள்ள பயங்கர நெருக்கடிகளின் வழியாகவும் மக்களின் எழுச்சிமிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் விளங்கச்செய்யப்பட்டது. ஒன்றுபட்ட மக்களாக எழுச்சிபெறும் மன உறுதி, போராட்ட உணர்வு, பொதுநன்மைக்காக தியாகம் செய்யும் மனநிலை போன்றவை மக்களிடையே மிகஉயர்ந்த அளவை அடைந்தன. மேலும், மக்கள் ஒன்றுபட்டு சாதிக்கவேண்டியவை யாவை என்பதை ஏறக்குறைய எல்லாப் பிரிவினரும் புரிந்து, ஏற்றுக்கொண்டனர். அவை யாவன:- சர்வாதிகார ஆட்சிக்கும் அந்நிய ஆதிக்கத்துக்கும் முடிவு கட்டுதல்; தேசிய இறைமையை மீண்டும் நிறுவுதல்; தடையற்ற தேசிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்; பிலிப்பைன்சின் அனைத்து வர்க்கத்தினருக்கும் இனத்தினருக்கும் உண்மையான ஜனநாயகமும் சமூக நீதியும் கொண்டுவருதல் என்பனவாகும்.

இருப்பினும், பல பிலிப்பைனியர் அடிப்படையான கேள்விக்கு இன்னமும் விடை தேடிக்கொண்டே இருக்கிருர்கள். அதாவது அமெரிக்க-மார்க்கோஸ் சர்வாதிகார ஆட்சியைத் தூக்கியெறிந்து புதிய பிலிப்பைன்சைக் கட்டுவது **எவ்வாறு?**

இந்தப் பிரச்சினைக்கு சரியான விடை நமது வரலாற்றிலேயே காணப்படுகிறது என்பதை **தேசிய ஜனநாயக முன்னணி** (தே. ஜ. மு.), 1973 ஏப்ரலில் அது அமைக்கப்பட்டதிலிருந்து, விடாமல் உறுதியாக எடுத்துக்காட்டி வருகிறது. அந்நியராதிக்கத்தையும் அவர்களின் ஆதிக்கத்துக்கு உடந்தையாயிருக்கும் உள்நாட்டுக் கொடுங்கோலர்களையும் எதிர்த்து நடத்தப்படும் தீரமிக்க ஆயுதப் போராட்டமே மேற்படி பிரச்சினைக்கு விடையென நமது வரலாற்றிலிருந்து அது கண்டு கொண்டு அவ்வாறே வலியுறுத்தியும் வந்துள்ளது. ஆகவே அமெரிக்க உதவிபெற்ற மார்க்கோசின் சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்து உண்மையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகத்தையும் தேசிய விடுதலையையும் சாதிப்பதற்காக, சாத்தியப்பட்ட எல்லாக் கட்சிகளையும் குழுக்களையும் ஆட்களையும் அவர்களின் ஆயுதப்படைகள் உட்பட இணைத்து வளர்த்தெடுத்து ஒருங்கிணைக்க தே. ஜ. மு. இடையறாது முயன்று வருகிறது.

தே. ஜ. மு. இல் பிலிப்பைன்ஸ் தேசியவாதிகள், ஜனநாயகவாதிகள், முற்போக்கு கிறிஸ்தவர்கள், தேசிய சிறுபான்மையினர், தன்னாட்சிவாதிகள், பெண் விடுதலையாளர்கள், சோசலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள், இன்னும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தேசபக்தர்கள் அனைவரும் அங்கம் வகித்து, இன்றைக்கு நடந்துகொண்டிருக்கும் மக்கள் போரில் பங்குபற்றி வருகின்றனர். இவர்கள் மிகப் பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தப் போக்குகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஒருவர் தே. ஜ. மு. இல் உறுப்பினராயிருப்பது அவரவர் சொந்த விருப்பத்தைச் சார்ந்தது. எந்தத் தனியொரு அரசியல் கட்சியோ குழுவோ தே. ஜ. மு. வில் தனியாதிக்கம் செலுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் தனக்கு மேல் அல்லது கீழ் உள்ள அமைப்புகளின் தீர்மானமியற்றும் நடவடிக்கைகளை முழுக்கத் தானே ஆக்கிரமிக்கப் பார்ப்பதும் அனுமதிக்கப்படமாட்டாது.

இதுவரையான புரட்சிகர ஐக்கிய முன்னணியின் மிக வளர்ச்சிபெற்ற அமைப்பாக தே. ஜ. மு. இருக்கிறது. தேசிய விடுதலைக்காகவும் உண்மையான ஜனநாயகத்துக்காகவும் போராடுவதற்கான பொது மார்க்கத்தைக் கடைப்பிடித்து வளர்த்தெடுக்கும் அனைத்துக் குழுக்களையும், தனிமனிதர்களையும் ஒன்றுபடுத்தி ஒருங்கிணைப்பதற்கான வழிமுறைகளை தே. ஜ. மு. வகுத்திருக்கிறது. பிலிப்பைனியப் புரட்சியின் இன்றைய கட்டத்துக்குப் பொருத்தமான போராட்ட வடிவமாக ஆயுதம் தாங்கிய மக்கள் போரை அது தேர்ந்தெடுத்து நடத்துகிறது. அதேவேளை வேறுவிதமான போராட்டங்களின் முக்கியத்துவத்தையும் அது அங்கீகரிக்கிறது. உண்மையில் ஆயுதப் போராட்டத்தை மற்ற எல்லாவிதமான சட்டரீதியான சட்டவிரோதமான போராட்டங்களுடனும் தே. ஜ. மு. இணைத்துள்ளது.

சர்வதேச, தேச, பிரதேச, மாகாண, மாநகர, நகர, கிராம வட்டாரங்களில் தே. ஜ. மு. தன் அடிப்படை அமைப்புகளை நிறுவியிருக்கிறது. இந்த அமைப்புகளின் அளவையும் தரத்தையும் மேலும் விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்காகக் கடுமையாக உழைத்து வருகிறது.

தே. ஜ. மு. பிலிப்பைன்ஸ் மக்களின் புரட்சிகர வரலாற்றின் சாரமான பாடங்களை நன்கு கற்று மனதில் கொண்டுள்ளது. நிகழ் கால உலகில் நடக்கும் புரட்சிச் சம்பவங்களை விடாமல் தொகுத்தறிந்து கொள்கிறது. மற்ற நாடுகளைச் சேர்ந்த - குறிப்பாக மூன்றும் உலகநாடுகளைச் சேர்ந்த - மக்களுடைய புரட்சிகளிலிருந்து ஒளிமிக்க பாடங்களையும் உணர்வையும் பெற்றுக்கொள்கிறது.

நமது சமுதாயத்தில் தொடர்ச்சியாய் நிலவும் புரட்சிகர கொந்தளிப்புக்கு நடுவில் பிலிப்பைனியத் தொழிலாளி வர்க்கம், உழவர் வர்க்கம், நகர சிறுமுதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் ஐக்கிய முன்னணி விரைவாகக் கட்டப்பட்டு வளர்ந்து வருகிறது. தேசிய ஜனநாயகப் புரட்சிப்போக்கில், தன்னை நன்கு விரிவுபடுத்தி வளர்த்துக் கொள்வதற்கு மிகவும் சாதகமான நிலையில் தே. ஜ. மு. இருக்கிறது. தேச அளவில் முழுவெற்றி பெறப்படும் வரைக்கும், ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்துடன் கூடிய (ஜ. கூ. அ.) புதிய பிலிப்பைன்ஸ் குடியரசு நிறுவப்படும் வரைக்கும், மக்கள் போரை ஒருகட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்வதில் தன் இன்றியமையாத பாத்திரத்தை தே. ஜ. மு. இடைவிடாமல் அதிகரித்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## II தே. ஜ. மு. இன் பொதுச் செயல்திட்டம்

பொதுச் செயல்திட்டமானது தே. ஜ. மு. வின் நீண்டகாலக் கடமைகள் அடங்கியது. அக் கடமைகள் ஐக்கிய முன்னணியின் அனைத்து உறுப்பினர்களையும், தேசிய ஜனநாயகப் புரட்சியின் முழுக்காலக் கட்டத்துக்கும் கட்டுப்படுத்தும் உடனடிக் கடமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை இது வழங்கும்.

### 1. அமெரிக்க ஏகாதிபத்தியம், உள்நாட்டு பிற்போக்கு வாதிகள் ஆகியோரின் சர்வாதிகார ஆட்சியைத் தூக்கியெறிய பிலிப்பைன் மக்களை ஒன்றுபடுத்தல்

பிலிப்பைன்ஸ் மக்களை ஒன்றுபடுத்துவதன் முதன்மை நோக்கம், தேசிய விடுதலைக்காகவும் உண்மையான ஜனநாயகத்துக்காகவும் நடத்தப்படுகிற புரட்சிப் போராட்டத்தை நிறைவு செய்து முழு வெற்றியைச் சாதிப்பதாகும்.

மக்களிடையே மிகப் பரந்துபட்டதும் வலுவானதும் சாத்தியப்படக்கூடியதுமான ஒற்றுமை விளங்குவது அத்தியாவசியமானதாகும். ஏனென்றால் நாம் யாரைத் தோற்கடிக்க நிற்கிறோமோ அந்த எதிரியாகிய அமெரிக்க - மார்க்கோஸ் சர்வாதிகார அரசு இன்றும் வலுவாகவே இருக்கிறது. வெறும் ராணுவ பலத்தைக் கொண்டே அது ஆள்கிறது. புரட்சிகர ஆயுதபலத்தைப் பயன்படுத்தும் ஒன்றுபட்ட மக்கள் சக்தியே அதை வெற்றிகரமாக முறியடிக்க முடியும்.

தேசிய ஐக்கிய முன்னணியை முயற்சி எடுத்துக் கட்டுவதன் மூலம் மக்களின் பரந்ததும் வலுவானதுமான ஐக்கியம் சாதிக்கப்படும். இதற்குள்ள வாய்ப்புகள் மிகச் சாதகமானவை. ஏனென்றால் சர்வாதிகார ஆட்சியானது மக்களுக்கெதிராக எண்ணற்ற குற்றங்கள் இழைத்து வருவதால் மக்களிடமிருந்து மென்மேலும் தனிமைப்பட்டு வருகிறது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் சர்வாதிகார ஆட்சியால் ஒடுக்கப்படுகின்றனர். எனவே இந்த கேடுகெட்ட ஆட்சியை பிலிப்பைன் சமுதாயத்திலிருந்து ஒழித்துக் கட்டப் பொது முயற்சி எடுக்க ஒன்றுசேரும் நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

தொழிலாளிகள், ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நகரச் சிறுமுதலாளி வர்க்கத்தின் கீழ்நிலையினர் ஆகியோர் தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதான சக்திகளாக உள்ளனர். மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையோராக உள்ள இவர்களே மிகவும் சுரண்டப்படுபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் ஆவர். எனவே இவர்களே புரட்சிகர மாற்றத்தை மிகவும் விரும்புவோராகவும் உள்ளனர்.

பணக்கார விவசாயிகள், நகரத் தொழிலாளி வர்க்கத்தின் மேல்தட்டினர், தேசிய முதலாளிகள், சிறு உடமையாளர்கள் நடுத்தர உடமையாளர்கள், வியாபாரிகள், அலுவலர்கள், சிறு வணிகர்கள், நடுத்தர வணிகர்கள், பெரும்பாலான அறிவாளிகள் ஆகியவர்களும் சர்வாதிகார ஆட்சியால் ஒடுக்கப்படுபவர்களாய் உள்ளனர். இவர்கள் தொழிலாளி வர்க்கத்துடனும் கீழ்நிலை சிறு முதலாளிவர்க்கத்துடனும் சேர்ந்து, சர்வாதிகார ஆட்சியைத் தூக்கியெறிவதற்காகப் பொதுவான போராட்டம் நடத்தும் மனதுடைய சக்திகளில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ஆட்சி கொடுங்கோலாட்சி ஆகியிருப்பதுவும், அதனால் உருவாகியுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் பெரு முதலாளிகள், பெரு நிலப்பிரபுக்கள் போன்ற சலுகைபெற்ற வர்க்கத்தின் சில பிரிவினருக்கும் கூட பெருந்தொல்லைகளை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் இப்போது மக்களுக்கு சில ஜனநாயக உரிமைகள் வழங்க உடன்படுகிறார்கள். மக்களின் போராட்டங்களில் பல்வேறு வழிகளிலும் அளவுகளிலும் பங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கிறார்கள். ஆட்சியின் அரசியல், தார்மீக வெறுமை கண்டு உள உரம் கெட்டு அதிருப்தி அடைந்துள்ள அரசு அதிகாரிகள் ராணுவ அதிகாரிகள் ஆகியோரின் எண்ணிக்கையும் அன்றாடம் அதிகரித்து வருகிறது. குறிப்பிட்ட சமயங்களில் குறிப்பிட்ட தூரத்துக்கு இவர்கள் பல்வேறு விதமான கூட்டுகளுக்குள் அடங்கிவரலாம். இந்தக் கூட்டுகள் ஐக்கிய முன்னணியின் பிரதான சக்திகளுக்குப் பலமூட்டி, ஆளும் கும்பலின் தோல்விக்கு வழிவகுக்கும் என்றால் மட்டுமே இவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வெளிநாட்டில் வாழும் பிலிப்பைனியர் உட்பட அனைத்து ஏகாதிபத்திய - எதிர்ப்பு ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை, ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கான அமைப்பு வடிவமாகவும் வழிவாய்ப்பாகவும் தே. ஜ. மு. பணியாற்றுகிறது. அநேக தேசபக்த, ஜனநாயக சக்திகளும், குழுக்களும் தனிமனிதர்களும் இன்னமும் தே. ஜ. மு. வில் ஒருங்கிணையத் தயாராக இல்லாதிருந்த போதிலும் நாம் அவர்களுடனும் சேர்ந்து நிற்கிறோம். மார்க்கோசின் ஆட்சியையும் அதன் ஏகாதிபத்தியத் தாங்கிகளையும் எதிர்க்கும் அவர்களின் முயற்சிகளை நாம் ஊக்குவிக்கிறோம்.

அமெரிக்க - மார்க்கோஸ் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான பொதுப் போராட்டத்திலும், ஐக்கிய முன்னணியைக் கட்டுவதற்காக ஒன்றுபட்டு உழைக்கும் காரியத்திலும், பல்வேறு வர்க்கங்களும் குழுக்களும் அமைப்புகளும் தனிமனிதர்களும் தமது தனிப்பட்ட துயரங்களுக்கெல்லாம் மூலகாரணங்கள் ஒன்றே என்பதைக் கொள்கின்றனர். அதிகரித்துவரும் ஒத்துழைப்பு மூலமும் ஒருங்கிணைப்பு மூலமும், அவர்கள் இன்றைக்குத் தேவையான பரஸ்பர நம்பிக்கையையும் ஒத்தாசையையும் வளர்த்துக்கொள்கிறார்கள். ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தை நிறுவ இது முதல் அத்தியாவசியமாகும்.

## 2. தேச அளவில் முழு வெற்றிபெற மக்கள் போர் தொடுத்தல்

தேசிய விடுதலைக்கும் உண்மையான ஜனநாயகத்துக்குமான போராட்டமானது ஆயுதந் தாங்கியதும் மிகுந்த பாதுகாப்பு வசதிகளுடன் கூடியதுமான பலமிக்க எதிரியின் முன் நிற்கிறது. எனவே, மக்கள் போரைத் தொடுப்பதன் மூலம் மட்டுமே பிலிப்பைன் மக்கள் அந்த எதிரியைத் தோற்கடிக்க முடியும். மக்கள் போரின் போர்த்தந்திரமானது, ஆயுதப் போராட்டத்துக்கும் சட்டரீதியான மக்கள் திரள் போராட்டங்களுக்கும் கிராமப்புற, நகர்ப்புற எழுச்சிகளுக்கும் பிற ஆயுதந்தாங்கிய, தாங்காத போராட்ட வடிவங்களுக்கும், அனைத்து மக்களையும் ஒட்டுமொத்தமாய்த் திரட்டுவதை அத்தியாவசியமாக்குகிறது. அதன்மூலமே படிப்படியாக சர்வாதிகாரத்தின் ராணுவ அரசியல் சக்தியை நாம் அழித்தொழிக்க முடியும்.

ஆயுதப் போராட்ட வடிவமே நாம் கையாள வேண்டிய பிரதான போராட்ட வடிவமாகும். புரட்சிகர ஆயுதப் போராட்டம் மூலமாக தம் சொந்த ஆயுத பலத்தை உருவாக்கிக் கொள்வதன்மூலம் மட்டுமே, மக்கள் தம் இறைமையையும் சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் திறம்பட நிறுவிக்கொள்ள முடியும். பாசிஸ சர்வாதிகார ஆட்சிச் சூழலில் இது மேலும் முக்கியமானதாகிறது.

ஆயுதப் போராட்டம் நடத்துவதன் மூலம் மக்கள் தம் எதிரியின் தாக்குதல்களை முறியடிக்க முடியும்; தம் உரிமைகளைக் காத்துக் கொள்ள முடியும்; ஒரு சரியான மக்கள் சேனையைக் கட்டவும் பிற்போக்கு அரசின் பலாத்காரக் கருவிகளை நொறுக்கவும் முடியும்.

மிகத் தீர்மானகரமான போராட்ட வடிவமாக ஆயுதப் போராட்டத்தைக் கொள்கிற அதே நேரத்தில், அதனுடன் பல்வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறமிக்க சட்டரீதியான போராட்ட வடிவங்களும் இணைக்கப்பட வேண்டும். ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், மறியல்கள், விண்ணப்பங்கள், தூதுகள் போன்ற சட்டரீதியான மக்கள் போராட்டங்கள், மக்களின் பொருளாதார, ஜனநாயகக் கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் உதவுகின்றன; மக்களுக்கு உரமூட்டுகின்றன; அரசியலில் அவர்களைப் படிப்பிக்கின்றன; மக்கள் போரின் உயர்ந்த வடிவங்களுக்கு அவர்களை அமைப்பு ரீதியில் தயாராக்குகின்றன; இந்தப் போராட்ட வடிவங்கள் பாசிஸ ஆளும் கும்பலையும் அதன் ராணுவ அமைப்பையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திறமையாகத் தனிமைப்படுத்தவும் செய்கின்றன. இவ்வாறு சர்வாதிகார ஆட்சியின் அரசியல் இராணுவ நிலையைப் பலவீனப்படுத்தி மக்களின் ஆயுதப்படைகள் மேலும் முன்னேறத் தளம் அமைக்கின்றன. ஆயுதப்போராட்டம் தன்பங்குக்கு மக்கள் இன்னும் அதிகமாய் சட்டபூர்வ மக்கள் திரள் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. இறுதியாக, கிராமப்புற-நகர்ப்புற எழுச்சிகளிலும், ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் முகமைகளுக்கும் எதிரான ஆயுதந்தாங்கிய சண்டைகள் வெடிக்கக்கூடிய மக்கள் போராட்டங்களிலும், திடீர்த் தாக்குதல்களிலும், பிரதேசம் மற்றும் தேசம் தழுவிய தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தங்களிலும், மக்கள் வேலைநிறுத்தங்களிலும் மேற்சொன்ன இரு போராட்ட வடிவங்களும் திறமையாக இணைகின்றன.

சில சூழ்நிலைகளில், இருக்கிற அமைப்புக்குள் பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் கூட மக்களுக்குச் சில ஜனநாயக உரிமைகளைப் பெற்றுத்தர முடியும். பரவலான அரசியல் கல்வி நடத்தவும், மக்கள் அமைப்புகளை விரிவு படுத்தவும் அத்தகைய நடவடிக்கைகளை நாம் சாதகமாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு ஆயுதப் போராட்டத்துக்கும் சட்டபூர்வமான புரட்சிகர மக்களியக்கத்துக்கும் அனுகூலமான நிலைமைகளைத் தோற்றுவிக்க முடியும். மேலும் இந்த நடவடிக்கைகளில் மக்கள் பெறும் வெற்றிகள் அரசுயந்திரத்தின் சில பகுதிகளில் ஆளும் கும்பல் பெற்றுள்ள பிடிப்பைத் தளர்த்த உதவும்.

அரசின் அதிகாரவர்க்க, ராணுவ யந்திரத்துக்குள்ளும் (அதாவது அரசு அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரிடையேயும்) நாம் அரசியல் கிளர்ச்சிப்பணி ஆற்றுகிறோம். இதன்மூலம் எதிரி முகாமின் சில பகுதிகளைப் பிளவுபடுத்தவோ நடுநிலைப்படுத்தவோ செய்கிறோம். ஆதரவு காட்டுவது, ராணுவத்தை விட்டு பகிரங்கமாய் ஓடிவரச்செய்து விடுவது போன்ற பல்வேறு ஒத்துழைப்பு வடிவங்கள் மூலம் மக்கள் தரப்புக்கு அவர்களைக் கூடிய வரை வென்றெடுக்கப் பார்க்கிறோம்.

நீண்டகாலமாக ஆயுதப்போராட்டம் பெரும்பாலும் கிராமப்புறத்திலேயே நடந்து வருகிறது. இங்குதான் எதிரியின் அரசியலதிகாரம் மிகப் பலவீனமாயுள்ளது. மக்கள் ஆயுதப் படைகளின் கெரில்லா அலகுகளையும் (Guerilla Units) கிரம அலகுகளையும் (Regular Units) வளர்த்தெடுக்கக் கிராமப்புறம் மிகப் பொருத்தமான இடமாக உள்ளது. கிராமப்புறத்தில் நடக்கும் ஆயுதப் போராட்டம் எதிரியின் செம்மையான ஆயுதபலத்தை அழித்து வருகிற அதே போது, அந்தந்த வட்டாரங்களில் மக்களின் அரசியலதிகாரத்தை - கூட்டணி அரசாங்கத்தின் அடிப்படைகளைக் கட்டவும் உதவுகிறது.

பெருநகரங்களில் சட்டரீதியான நடவடிக்கைகளும் கெரில்லா நடவடிக்கைகளும் சிறந்த முறையில் நடைபெற்று எதிரியின் அரசியல் ராணுவ யந்திரத்தின் ஆதார மையத்தைக் குலைத்துப் பலவீனப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்துகின்றன. இவ்வாறு அவை ஆயுதப் போராட்டத்துக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு தருகின்றன. படிப்படியாக அந்த யந்திரத்தின் பலம் அழிக்கப்பட்டு வருகிறது. அதேவேளையில் சட்டபூர்வ நடவடிக்கைகளும் ஆயுதந்தாங்கிய கெரில்லா நடவடிக்கைகளும் மக்களை அரசியல் ரீதியிலும் ராணுவ ரீதியிலும் பரவலான எழுச்சிகளுக்கும் கிளர்ச்சிகளுக்கும் ஆயத்தம் செய்கின்றன. இவ்வாறு மக்கள் போரில் அவர்கள் நேரடிப்பங்கு கொள்ளுமாறு அணிதிரட்டுகின்றன.

மக்கள் போரினூடே நாம் தொடர்ந்து மக்கள் ஆயுதப்படைகளைக் கட்டிவருகிறோம். புதிய மக்கள் சேனையை இப்போது தே. ஜ. மு. யின் பிரதான ஆயுதப் படையாக உள்ளது. தே. ஜ. மு. மற்ற அரசியல் கட்சிகளையும் குழுக்களையும் தனிமனிதர்களையும், அவ்வவை தம் சொந்த ஆயுதந்தாங்கிய மக்கள் படைகளைக் கட்டுமாறு ஊக்குவிக்கிறது. இவை புதிய மக்கள் சேனையின் பகுதியாகவோ அல்லது தனித்தோ இயங்கலாம். சுயேச்சையான ஆயுதக் குழுக்கள் தோன்றுமானால் தே. ஜ. மு. அவற்றை வரவேற்கவே செய்யும். அவற்றுடன் ஒருங்கிணைய முயலும். காலப்போக்கில் எல்லாப் புரட்சிகர ஆயுதப்படைகளுக்கும் பொதுவான ஒன்றுபட்ட தலைமையை உருவாக்க வழியமைக்கும்.

மக்கள்போரின் வளர்ச்சிப்போக்கு பெரும்பாலும் பின்வரும் போர்த்தந்திரக் கட்டங்களைக் (strategic stages) கொண்டதாயிருக்கும்: தற்காப்புக் கட்டம், எதிரிக்கு இக்கட்டுநிலை ஏற்படுத்தும் கட்டம், தாக்குதல் கட்டம்... தற்காப்புக் கட்டத்தில் புரட்சிகர ஆயுதக் குழுக்கள் கிராமப்புறங்களில் செயல்தந்திரரீதியான தாக்குதல்கள் தொடுக்கும் எதிரியின் ஆயுதங்களைக் கைப்பற்றி தம்மைப் பலப்படுத்திக்கொள்ளும். போர்த்தந்திர ரீதியான எதிரிக்கு இக்கட்டு நிலை ஏற்படுத்தும் கட்டம்வரை இது தொடரும். இக்கட்டுநிலைக் கட்டத்தில் அவர்களின் பலம் பிற்போக்கு ஆயுதப்படைகளின் பலத்துக்கு ஏறக்குறைய சமமாக இருக்கும். அதனையடுத்து மக்கள் ஆயுதப் படைகள் போர்த்தந்திரத் தாக்குதல் தொடுத்து எதிரியை அவனது அதிகார மையங்களிலேயே தோற்கடிக்க முடியும்.

மக்கள் போரினூடே மக்களும் அவர்களின் புரட்சிகர ஆயுதப் படைகளும் அடிப்படையில் தற்சார்பாயிருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து அவர்கள் ராணுவ உதவி நாடுவது, அவர்களின் தற்சார்பு முயற்சிகளுக்குத் துணை கூட்டுவதற்குத்தான். ஏனெனில் சர்வாதிகார ஆட்சிக்கு அமெரிக்கா நீண்டகாலமாக மென்மேலும் அதிகரித்த அளவில் ராணுவ உதவி செய்துவருகிறது. நேரடியான அமெரிக்கத் தலையீடும் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலும் அதிகரித்து வருகின்றன. அமெரிக்காவின் ராணுவ உதவியும் பிற உதவியும் இல்லாமல் பாஸிச சர்வாதிகார ஆட்சி நீண்ட நாள் நிலைக்க முடியாது.

### 3. ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தையும் மக்கள் ஜனநாயகக் குடியரசையும் நிறுவுதல்

இப்போது கிராமப்புறத்தில் வட்டார ஜனநாயக ஆட்சியமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவை, இனி உருவாகப் போகும் தேசந்தழுவிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்துக்கும் (ஜ. கூ. அ.) ஜனநாயகக் குடியரசுக்கும் இப்போதே ஒரு அடித்தளத்தை உருவாக்கி வருகின்றன. ஜனநாயக அரசாங்கத்தின்கீழ் இந்த வட்டார அமைப்புகளின் தன்மை, பிரதிநிதித்துவம், பணி ஆகியவை இடையறாது வளர்ந்து செல்லும்; மேலும் கிராமநிலையிலிருந்து நகர, மாவட்ட, மாகாண, பிரதேச மட்டங்கள் வழியாக தேசமட்டத்திற்கு அவை விரிந்தும் செல்லும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதப்புரட்சி முழுவெற்றி பெறும் முன்பு அனைத்துத் தேசபக்த, ஜனநாயக வர்க்கங்கள், கட்சிகள், மக்கள் அமைப்புகள், குழுக்கள், ஆதரவான பிறசக்திகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கூட்டி அரசியல் ஆலோசனை மாநாடு நடத்தப்படும். இது ஒரு செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கும். அக்குழு தேச அளவில் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தை முறைப்படி நிறுவ வழியமைக்கும். இந்தக் குழுவை அமைத்ததும் மக்கள் ஜனநாயகக் குடியரசு பிரகடனம் செய்யப்படும்.

சமாதான நிலைமைகளுக்கு அமைதியாகவும் முறையாகவும் திரும்புவதை செயற்குழு உறுதிசெய்யும். போர்க்காயங்கள் சீக்கிரத்தில் ஆறும்படி பார்த்துக்கொள்ளும். மக்களுக்கெதிராகக் கடுமையான குற்றங்கள் ஏதும் இழைக்காத அனைத்து அரசாங்க ஊழியர்களும் பணித்துறையில் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள். இது, அத்தியாவசியப் பணித்துறைகளில் தேவையற்ற புதுப்பிரச்சினைகள் தோன்றாமலிருப்பதற்காகத்தான். மக்கள்போரின் போக்கில் எந்த ஒரு அரசியல் கட்சியோ குழுவோ ஆளோ சட்டம் நடைமுறை ஆகியவற்றில் ஏகபோக அதிகாரம் செலுத்த விடப்படமாட்டாது.

புதிய அரசின் அரசியல் சாசனத்தை வரைய ஒரு அரசியல் நிர்ணயக்குழு தேர்ந்தெடுக்கப்படும். அரசியல் சாசனத்தை வரைந்து சட்டமாக்கியபின் தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜனநாயகக் கூட்டணியரசாங்கம் துவக்கிவைக்கப்படும். அதன்பிறகு செயற்குழு கலைக்கப்பட்டுவிடும்.

தன் சட்டத்திலும் நடைமுறையிலும் மக்கள் ஜனநாயகக் குடியரசானது.

ஒரு உண்மையான நவீனக் குடியரசின் அடிப்படை அம்சங்களைப் போற்றிக்காக்கும்.

மக்களின் இறைமையையும், தேச சுதந்திரத்தையும், மக்களிடமிருந்து உதிக்கும் எல்லாவிதமான அரசியல் அதிகாரத்தையும்போற்றிக்காக்கும்; ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்கள் மக்களின் பிரதிநிதிகளாகவும் ஊழியர்களாகவும் இருப்பார்கள்.

மக்களிடம் கேட்காமல் தன்மூப்பாய்ச் சட்டங்கள் போட்டுக் கொடுமைப்படுத்தும் சர்வாதிகாரிக்குப் பதில், மக்களால் எல்லா மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் சபைகளையும், மக்கள் தம் அனைத்து அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரமாகப் பிரயோகிப்பதையும் போற்றிக்காக்கும்.

ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ஒரு நியாயமான நீதியமைப்பை நிறுவும்.புரட்சி வெற்றிபெற்றதும் மக்கள் முறையீட்டுமன்றம் ஒன்று உருவாக்கப்படும். மக்களுக்கு எதிரான குற்றங்கள் இழைத்த, புரட்சியின் எதிரிகளையும், அவர்களுக்கு உடந்தையாயிருந்தவர்களையும் இந்த மன்றம் விசாரித்துத் தண்டிக்கும். பழைய அமைப்பின் ஆளும் கூட்டம் தவறான முறையில் குவித்துக்கொண்ட சொத்துகளைப் பறிமுதல் செய்யச் சொல்லும். மக்களைக்கொன்று குவித்து இரத்தப்பழி யேற்றவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும். திருந்தக்கூடியவர்களுக்கு சீர்திருத்தக்கல்வி அளிக்கப்படும். நடுநிலை தவறாத நீதிமன்றம் ஒன்றால் இந் நியாயங்கள் வழங்கப்படும். காலப்போக்கில் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் உயர்நீதி அங்கமாக மக்கள் உயர்நீதிமன்றம் நிறுவப்படும். மக்கள் நீதிமன்றங்கள் பொது இடங்களில் நடத்தப்படும். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குக் குற்றச்சாட்டை எதிர்த்து வழக்காடும் உரிமை தரப்படும். இந்த மன்றங்கள் வட்டார அளவிலும் நிறுவப்படும்.

மக்கள் ஜனநாயகக் குடியரசில், அரசதிகாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் குறிப்பிட்ட அரசாங்க வடிவமாகிய ஜனநா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யகக் கூட்டணி அரசாங்கம், மக்களின் சித்தத்தையும் நலன்களையும் போற்றிக் காக்கும். அரசாங்கத்தில் தொழிலாளிகள், உழவர்கள், நகரச்சிறுமுதலாளி வர்க்கத்தினர், தேசிய முதலாளிவர்க்கத்தினர் ஆகியோருக்கு சரியான பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிசெய்யும். மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் போற்றிக் காக்கும். அந்த அரசாங்கம் அமெரிக்க-மார்க்கோஸ் சர்வாதிகாரத்தையும் அதன் பிறகு ஏற்படக்கூடிய எந்தப் பிற்போக்கு ஆட்சியையும் தூக்கியெறிய செயலூக்கத்தோடு உழைத்துள்ள எல்லா நட்புவர்க்கங்களையும் கட்சிகளையும் மக்கள் அமைப்புகளையும் குழுக்களையும் சக்திகளையும் கொண்டதாக இருக்கும்.

## 4. புரட்சிகர ஆயுதப் படைகளை ஒரே தேசியப் புரட்சிச் சேவையாக ஒருங்கிணைத்தல்

ஆயுதப்போராட்ட காலத்தில், பல்வேறு பாஸிச எதிர்ப்பு நடவடிக்கை முயற்சிகளின்போது எழும் புரட்சிகர ஆயுதப் படைகள், ஒரே தேசிய புரட்சிச் சேனையாக ஒருங்கிணைக்கப்படும். இச்சேனை ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் கீழ் இருந்து, தேசிய பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும். அதற்கு தரை - கடல் - விமானப் படைகள் இருக்கும். அத்துடன் பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் காவல்படைகளும் மக்கள் குடிப்படைகளும் இயங்கும். நாட்டின் இறைமை, பிரதேச ஒற்றுமை ஆகியவற்றைக் காப்பதும் உள்நாட்டு ஆட்சிக் கவிழ்ப்பு வேலைகளிலிருந்தும் வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்தும் புரட்சியையும் பிலிப்பைன் மக்களையும் காப்பதும் புரட்சிச் சேனையின் அடிப்படையான கடமைகளாகும். இக்கடமைகளை நிறைவேற்ற, புரட்சிச் சேனையும் மக்களும் அமெரிக்கா உட்பட எந்த அந்நிய சக்திகளின் தலையீட்டையும் ஆக்கிரமிப்பையும் எதிர்க்க எந்நேரமும் தயாராயிருக்க வேண்டும்.

மக்கள் போரில் புடமிடப்பட்ட இராணுவப் படைகள், பிரதேசப் படைகள், கெரில்லாப் படைகள் ஆகியவற்றிலிருந்து தேசியப் பாதுகாப்புப் படைகள் அமைக்கப்படுகின்றன. தேசியப் பொலிஸ் படையும் வட்டார பொலிஸ்படைகளிலிருந்தே எடுத்துக் கொள்ளப்படும். மக்கள்போரின் போக்கில் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கும் குடிப்படைகளிலிருந்து வட்டார போலிஸ்படைகள் அமைக்கப்படும். அவை முன்பு இல்லாதிருந்த பகுதிகளிலும் இப்போது புதிதாக அமைக்கப்படும் நெடுங்காலம் புரட்சிக்காரராயிருந்தவர்கள் தேசியப் புரட்சிச் சேனையில் உறுதியான தலைமையேற்பார்கள். புரட்சி வெல்வதற்கு முன்பே புரட்சியில் சேர்ந்துகொண்ட எதிரிப்படை அதிகாரிகள் அல்லது பெரிய குற்றம் எதையும் இழைக்காதவர்கள், படிநிலைத் தேர்வு அடிப்படையில் ராணுவப் பதவிகளில் தங்கியிருக்க அனுமதிக்கப் படுவார்கள். இவர்கள் தம் அறிவையும் அனுபவத்தையும் புரட்சிப் போராளிகளுக்கும் சொல்லித் தருவதுடன் தம்மைப் புரட்சிக் கல்விக்கு உட்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

தேசியப் புரட்சிச்சேனை, தன் ராணுவப் பணியைச் செய்வதுடன், தேசிய வாழ்வின் பிறதுறைகளிலும் - குறிப்பாக உற்பத்தித் துறையில் - பங்கெடுத்துக்கொள்ளும். நிரந்தரப் போர்வீரர்களுக்கும், குறிப்பிட்ட நியாயமான காலகட்டத்துக்கு ராணுவப் பணியாற்ற வேண்டியிருக்கிற இளைஞர்களுக்கும் அது ஒரு புரட்சிப் பணியாக இருக்கும்.

## 5. மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் போற்றி வளர்த்தல்

ஜனநாயகக் குடியரசின் அரசியல் சட்டத்திலும் நடைமுறையிலும் மக்களின் இறைமையே மீறப்படக்கூடாத புனித விதியாக இருக்கும். சகல உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் அடிப்படை இதுவே. அர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாங்கத்தின் பணி, மக்களின் சித்தங்களை யும் நலன்களையும் பிரதிபலித்து அவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் போற்றிக்காத்தல் என்ற அளவிலேயே நிற்கும். எந்த ஒடுக்குமுறை - கொடுங்கோல் ஆட்சியையும் எதிர்த்துக் கலகம் செய்ய மக்களுக்கு உரிமை உண்டு.

சுயேச்சாதிகாரத்தையோ அல்லது தனியாளாட்சியோ எந்த நிலையிலும் ஏற்படாதபடிக்கு அரசியல் சட்டத்தில் ஒரு தனிவிதி ஏற்படுத்தப்படும். குறிப்பிட்ட அரசாங்க அங்கங்களின் கூட்டுப்பரிசீலனைகள் இல்லாமலே, பகிரங்கமாக விசாரித்தறியப்படக்கூடிய உண்மைகளுக்குப் பொருந்தாத வகையிலோ ராணுவச் சட்டம் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்காக ஒரு தனிவிதியும் சேர்க்கப்படும். ராணுவச்சட்டம் அறிவிக்கப்பட்டால் அது குறிப்பிட்ட, மிகச்சிறிய காலத்திற்கே அமுலிலிருக்கும்.

ஒரு சுதந்திர ஜனநாயக அரசியல் சட்டத்தில் அடங்கியிருக்கும் அடிப்படை ஜனநாயக உரிமைகள்யாவும் மக்கள் ஜன நாயகக் குடியரசில் அடங்கியிருக்கும். இவற்றில் பின்வருவன அடங்கும்:-

உயிர்வாழும் உரிமை, சுதந்திரஉரிமை, சொத்துரிமை, நீதிபெறும் உரிமை, பிடி ஆணையில்லாமல் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான கைதுகளுக்கும், வீடுகளில் சோதனை போடுவதற்கும் உள்ளாகாதிருக்கும் உரிமை, தனிப்பட்ட கடிதப்போக்குவரத்துகளின் அந்தரங்கம் பாதுகாக்கப்படும் உரிமை, வாழும் இடத்தையும்; இடத்தை மாற்றிக்கொள்வதையும் சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை, கூட்டம் கூடும் உரிமை, வேலை நிறுத்த உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சிந்தனையுரிமை, மதநம்பிக்கைச் சுதந்திரம், ரகசியவாக்குப் பெட்டி மூலம் வாக்களிக்கும் உரிமை, ஆதாயமானவேலை தேடிக்கொள்ளும் உரிமை......

உற்பத்திச் சாதனங்களில் பொதுவுடமை தவிர, நிலச்சீர்திருத்தம், நேர்மையான உழைப்பு, தொழில்முனைப்பு, திறமை, புதுப்புனைவு, அறிவுத்திறன் ஆகியவற்றால் பெறப்படும் உற்பத்திச்சாதனங்களில் தனியுடமை உரிமை தரப்படும். சொந்த நிலம் வைத்துப் பயிரிடும் எல்லா விவசாயிகள், சொந்தமாக தொழிற்கருவிகள் வைத்திருக்கும் மிகக் கீழ்நிலையிலுள்ள 'முதலாளிகளில்' இருந்து தேசிய முதலாளிகள் வரை பாடுபடும் எல்லா உடமையாளர்கள் ஆகியோரின் உற்பத்தி முயற்சிகளுக்கு அரசுக் கடன்கள், சந்தை உறுதி, கூட்டுறவுகள், அரசின் பங்கு ஆகியவற்றின்மூலம் அரசாங்கம் உதவும்.

பெண்கள் ஒடுக்கப்படும் தனிப்பட்ட வடிவங்களை ஒழிக்க ஜனநாயகக்கூட்டணி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். சமூக வாழ்வின் சகல துறைகளிலும் அவர்களுக்கு சமமான பங்கும் வாய்ப்புகளும் கிடைப்பதை உறுதிசெய்யும். இந்த முயற்சியில் மக்கள் அமைப்புகளை குறிப்பாக பெண்கள் அமைப்புகளை, புதிய அரசாங்கம் ஈடுபடுத்தும்.

## 6. அமெரிக்காவுடனும் பிற அந்நிய சக்திகளுடனுமான அனைத்து ஏற்றத்தாழ்வான உறவுகளையும் துண்டித்தல்.

நம் நாட்டை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதிக்கம் செலுத்திவரும் நீண்ட வரலாறு நெடுகவும் அமெரிக்காவும் பிற அந்நிய சக்திகளும் நம் தேச சுதந்திரத்தையும் இறைமையையும் பிரதேச ஒற்றுமையையும் மீறுகின்ற பல்வேறு ஒப்பந்தங்களைப் பிரயோகித்திருக்கின்றன. அவ்வொப்பந்தங்கள் பிலிப்பைன்சை அந்நியச் சக்திகளுக்கு தொடர்ந்து கீழ்ப்படுத்தி வைத்திருக்கின்றன. அமெரிக்க - மார்க்கோஸ் சர்வாதிகார ஆட்சி இந்த அளவற்ற சலுகைகளை மேலும் அதிகப்படுத்திக் கொண்டுள்ளது. பிலிப்பைன்சின் பரந்துபட்ட மக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கு இதனால் மிகப்பெரிய தீங்கு நேர்ந்துள்ளது. முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புச் சட்டங்கள், பொதுவங்கிச் சட்டம், நட்புறவு - வணிக - கடற்செலவு ஒப்பந்தம், பரஸ்பரப்பாதுகாப்பு ஒப்பந்தம், இராணுவ உதவி ஒப்பந்தம், இன்னும் தேச நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய பல்வேறு பண்பாட்டு ஒப்பந்தங்கள் உட்பட்ட இந்த ஏற்றத்தாழ்வான, அநீதியான சட்டங்களுக்கும் ஒப்பந்தங்களுக்கும் என்றென்றைக்குமாக முடிவு கட்டப்படவேண்டும். அதுபோலவே நாட்டின் உள்விவகாரங்களில் எல்லாவகையான அந்நியர் தலையீட்டுக்கும், குறுக்கீட்டுக்கும் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் முடிவு கட்டவும், அவற்றுக்கெதிராக தீவிரமாகத் தற்காத்துக் கொள்ளவும் முயலும்.

அமெரிக்கா பிலிப்பைன்சில் உள்ள தன் இராணுவத் தளங்களைக் கைவிட்டுவிட வேண்டும். உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கு இராணுவ உதவி வழங்குவதை நிறுத்த வேண்டும். ஜனநாயகக் குடியரசு இராணுவத் தளங்களை தனது இராணுவ, இராணுவம் சாரா நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். எந்த அந்நிய சக்தியும் பிலிப்பைன் மண்ணில் இராணுவத் தளங்களை அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. அல்லது எவ்விதப் போக்கு வரத்துவழிகள் மூலமும் பிலிப்பைன் எல்லைக்குள் அவை ஆயுதங்களைக் கொண்டுவர விடப்படமாட்டாது.

பொதுவில், அமெரிக்காவும் பிற பெரிய அந்நிய முதலாளிகளும் செலுத்தியுள்ள நேரடி முதலீடுகளும் லாபம்தரும் சொத்துகளும் - குறிப்பாக ஜீவாதாரமான, ராணுவ சம்பந்தமான எல்லாத் தொழில்துறைகளும் தேசியமயமாக்கப்படும். தேவைப்பட்ட இடங்களில், நட்டஈடு தருவதோ மேற்சொன்ன பொதுவிதியிலிருந்து விலக்கு அளிப்பதோ பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளப்படும் - இதுவும் தேசத்தின் நலனையே அடிப்படையாகக்கொண்டே செய்யப்படும். ஆயினும் எதிர்ப்புரட்சி நோக்கங்களுக்காக முனைந்து ஈடுபடுத்தப்பட்டிருக்கிற முதலீடுகள் நட்டஈடின்றி முழுக்கப் பறிமுதல் செய்யப்படும்.

பிலிப்பைன்சின் பொருளாதாரத்துக்குச் சுமையேற்றி அதற்குக் குழிபறித்துக்கொண்டிருக்கிறதும், நாட்டின் தொழில்மயமாகாத, விவசாயத்தன்மையை மேலும் மோசமாக்குகிறதும், உள்நாட்டு மூலவளங்களை பொருளுற்பத்தியற்ற துறைகளில் திருப்பி விடுகிறதுமான 2 எம்.எப். கடன்கள் போன்றவை ரத்து செய்யப்படும். அல்லது இந்தக் கடன்களின் தீய தன்மைகளை விலக்கிக் கொள்ளும்வகையில் புதிய ஒப்பந்தம் செய்யப்படும். புதிய கடன்களை எளிய முறையில் திருப்பிச் செலுத்தப்படும் என ஒப்பந்தம் செய்துகொண்டு அவ்வாதாரங்களை உற்பத்தி, தொழில்துறை நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### *7. உண்மையான நிலச்சீர்திருத்தத்தை நிறைவேற்றுதல்; விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கல் மூலமும் நவீனமயமாக்கல் மூலமும் கிராமப்புற உற்பத்தியைப் பெருக்குதல்

புரட்சி இயக்கத்தின் தற்போதைய நிலச்சீர்திருத்தக் கொள்கை, குத்தகையைக் குறைப்பதும் வட்டித்தொழிலை ஒழிப்பதுமே ஆகும். ஒருசில பகுதிகளில் மட்டுமே எதேச்சாதிகார நிலப்பிரபுக்கள், நிலப்பறிக்காரர்கள் ஆகியோரின் நிலம் ஏழை உழவர்களுக்கும் குடியேறிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

காலப்போக்கில் நிலச் சீர்திருத்தக் கொள்கை என்பது நிலமற்ற உழவர்களுக்கு நிலத்தை இலவசமாகப் பகிர்ந்தளிப்பதாக இருக்கும். ஜனநாயகக்கூட்டணி அரசாங்கத்தின்கீழ் இந்த நிலச்சீர்திருத்த நடைமுறை நாடு முழுவதும் நிறைவேற்றப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் ஜனநாயகக் குடியரசில், நிலச் சீர்திருத்தத்தால் பயன்பெறுபவர்களும் பிற பாடுபடும் நிலவுடையார்களும் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் துணைத்தொழில்களை வளர்க்கவும் ஊக்குவிக்கப்படுவார்கள். சாதாரண உழைப்புப் பரிமாற்றம், பரஸ்பர உதவிகள், ஒத்துழைப்புகள் போன்ற எல்லாவிதமான விவசாயக் கூட்டுறவு வடிவங்களும் ஊக்குவிக்கப்படும். விவசாயக் கூட்டுறவு மயமாக்கமும் யந்திரமயமாக்கமும் படிப்படியாகவும் தொழில்துறையின் வளர்ச்சியோடிணைந்தும் நிறைவேற்றப்படும். பொருளாதாரத்தின் அடித்தளமாக விவசாயம் அமையும். அது மக்களுக்கு உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களையும் தொழில்துறைக்கு கச்சாப் பொருட்களையும் அதிகரித்த அளவில் வழங்கும்.

விவசாயிகளின் விளைபொருள்களுக்கு பரந்த சந்தை உறுதி செய்யப்படும். இதனால் விவசாயிகள் மிகுந்த ஊதியங்களைப் பெறுவார்கள். எனவே தமது உற்பத்தி மற்றும் சொந்த உபயோகத் தேவைகளுக்காக அதிகரித்த அளவில் தொழில்துறைப் பண்டங்களை வாங்க அவர்களுக்கு இயலும்.

பணக்கார விவசாயிகள் தமது பழைய வாழ்க்கைத்தரத்தில் தொடர்ந்துவாழ அனுமதிக்கப்படுவார்கள். தம் உபரி மூலதனத்தைப் பிற பொருளாதாரத் துறைகளில் ஈடுபடுத்தி தம் வருமானங்களைக் குறையாமல் வைத்துக்கொள்ளவோ மேலும் அதிகரித்துச் செல்லவோ ஊக்குவிக்கப்படுவார்கள். படிப்படியாக கூலி உழைப்பைவிட சொந்த உழைப்பையே அவர்கள் அதிகம் சார்ந்து நிற்கும் நிலை உருவாக்கப்படும்.

புரட்சியை ஆதரித்து, நிலச்சீர்திருத்தத்தை எதிர்க்காதிருக்கிற நிலப்பிரபுக்களுக்கு தொடர்ந்து தகுந்த கவனம் தரப்படும். அவர்களுக்கு உழுவதற்கு நிலமும் ஓரளவு நட்டஈடு அல்லது அவர்களின் குடும்பங்களைக் காப்பாற்றப் போதிய வருவாய் வரக்கூடிய மாற்று வழிகளும் ஏற்படுத்தித் தரப்படும். தொழில்துறையில் வேலைதரப்படுவதன் மூலமும் அல்லது தொழில்துவங்க உதவி செய்வதன் மூலமும் தொழில்துறையில் அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படும்.

பன்னாட்டு குழுமங்களோ அவர்களின் தரகு முதலாளியக் கூட்டாளிகளோ உடைமைகொண்டு கட்டுப்படுத்திவரும் பெருந்தோட்டங்களை அரசு எடுத்துக் கொண்டும் பிற முதலாளியப் பண்ணைகளைப் பொறுத்தமட்டில் அரசு வேறொரு இளக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்கும். இது பண்ணையின் அளவு, பயிரின் வகை, புரட்சிபற்றி பண்ணையார்கள் மேற்கொள்ளும் நிலைபாடு ஆகியவற்றைப் பொறுத்து அமையும். நிச்சயமாக, புரட்சிக்கு ஆதரவு அளிக்கும் முதலாளியப் பண்ணையார்களுக்கு, அரசுடன் சேர்ந்து விவசாய உற்பத்தியை அதிகரிப்பதிலும் விவசாயத்தை நவீனப்படுத்துவதிலும் எல்லாவித வாய்ப்புகளும் அளிக்கப்படும். ஒரே நிபந்தனை என்னவென்றால் பண்ணைத் தொழிலாளிகள் சுரண்டப்படக்கூடாது; நியாயமான கூலி, வேலைநிலைமைகளில் மேம்பாடு போன்ற அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

விவசாய விளைபொருட்களைப் பதப்படுத்தும், பக்குவப்படுத்தும், சந்தைக்கு அனுப்பும் தொழில்களெல்லாம் அரசின் உடமையாக இருக்கும் அல்லது அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கும்; அல்லது இவை விவசாயக் கூட்டுறவுகள் அல்லது அரசும் தனியாரும் சேர்ந்து நடத்தும் கூட்டு நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களின் உடைமையாக அல்லது அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். யார்வசம் அவை விட்டுவைக்கப்படுமென்பது, பயிரின்வகை, தேசப் பொருளாதாரத்திலும் மக்கள் வாழ்க்கையிலும் அது வகிக்கும் இடம், ஒரு பண்டத்துக்கே உரிய சிறப்புத் தன்மைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவற்றுக்கேற்ப முடிவு செய்யப்படும். எப்படியும் விவசாயப்பண்டங்களின் வணிகம், பக்குவப்படுத்தல், பதப்படுத்தல் போன்ற தொழில்கள் சலுகைபெற்ற ஒரு சிலரால் கட்டுப்படுத்தப்படுவது நிறுத்தப்படும். பதிலாக அவை அரசிடமோ விவசாயக் கூட்டுறவுகளிடமோ விடப்படும். உள்ளூரிலேயே பலவிதமான விளைபொருள் பக்குவப்படுத்தும் தொழில்களும் பெருகுமாறு ஊக்குவிக்கப்படும். ஆனால் எந்தத் தனியார் நிறுவனமும் மக்களின் வாழ்வை ஆக்கிரமிக்கவும், தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிற விவசாயம் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்களையும் சுரண்டி ஏகபோக லாபம் பெருக்கவும் அனுமதிக்கப்படாது.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதை ஊக்குவிக்க ஜனநாயகக்கூட்டணி அரசாங்கம் உள்நாட்டிலேயே உரம், விதை பூச்சிக்கொல்லித் தொழிற்சாலைகளை நிறுவும். சரியான நீர்ப்பாசன, நீர்உபயோக முறைகளை உறுதியாய் நடைமுறைப்படுத்தும். விவசாயக் கூட்டுறவுகளுக்குக் கடன், தொழில்நுட்ப உதவி, சந்தைக்குப்பொருட்களை அனுப்புவதற்கு உதவி, பத்திரப்படுத்தும் வசதி போன்றவற்றையும் அரசு வழங்கும்.

கால்நடை வளர்ப்பும் மீன்வளர்ப்பும் ஊக்குவிக்கப்படும். குறிப்பாக அவற்றைச் சிறிய அளவில் உற்பத்தி செய்வோர் கூட்டுறவுகள் ஏற்படுத்தப்பட்டு தகுந்த அரசுதவி தரப்படும். கடல்வளங்களைக் கொள்ளையடித்து மாசுபடுத்தி, பிலிப்பைன் மீனவர்களையும் விவசாயிகளையும் நாசப்படுத்தி வரும் பன்னாட்டு குழுமங்கள், அந்நிய மீன்பிடிக் கப்பல்கள் ஆகியவற்றுக்கு முடிவு கட்டப்படும்.

**8. தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான முதல் வேலையாக தொழில்மயமாக்கத்தை நிறைவேற்றுதல்**

ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் தேசத்தைத் தொழில்மயமாக்குவதை பொருளாதார வளர்ச்சியின் முன்னணிக் காரணியாகக் கொள்ளும். இது நமது பொருளாதார வளர்ச்சியின் பிரதான அடிப்படையான விவசாயத்துக்கு உதவிசெய்வதாயமையும். விவசாயத்துறையின் வளர்ச்சி பெருமளவில் விவசாய உபரியை உருவாக்குகிறது. இவ்வுபரியை இதுவரை ஒட்டுண்ணி நிலப்பிரபு வர்க்கம் அபகரித்து வந்திருக்கிறது. புரட்சிக்குப்பின் இவ்வுபரியானது தொழில்துறை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் அதேசமயம் விவசாய வளர்ச்சியானது, கிராம மக்களின் வாங்கும் திறனை அதிகரித்து தொழில்துறைப் பண்டங்களுக்கான உள்ளூர்ச் சந்தையை விரிவுபடுத்தும்.

இன்றைய காலனிய வணிகமுறையானது விவசாய, கனிவள, கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்வது; முதலையும் முற்றுப்பெருத பண்டங்களையும் இறக்குமதி செய்வது என்பதையே முக்கிய அடிப்படையாகக் கொண்டுள்ளது. தேசியத் தொழில்மயமாக்கம் இந்த முறையை உடைத்தெறியும். புதிய அரசாங்கத்தில் மரக்கட்டைகள், தேங்காய், கரும்பு போன்ற கச்சாப்பொருட்கள் உள்நாட்டிலேயே பக்குவப்படுத்தப்படும். உள்நாட்டுச் சந்தைக்கும் மறுஏற்றுமதிக்குமுரிய மறுசேர்மான, மறுகட்டுமான, சிறுரக பக்குவப் படுத்தும் தொழில்கள், கூடியவரை பிலிப்பைன்சிலேயே தயாரிக்கப்படும் பண்டங்களைக் கொண்டே நடைபெறும்.

எல்லா ஜீவாதாரமானதும் ராணுவ சம்பந்தமானதுமான தொழில்களையும் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் தேசியமயமாக்கும். இவை இப்போது ஏகாதிபத்தியச் சக்திகளாலோ அவற்றின் தரகு அதிகாரவர்க்க முதலாளியக் கூட்டாளிகளாலோ கட்டுப்படுத்தப்படுகின்றன. பாசிசக் கும்பல் அநியாயமாய்க் குவித்துக் கொண்டுள்ள செல்வம் அனைத்தையும் புதிய அரசு பறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் செய்யும். ஏகாதிபத்தியச் சக்திகளும் அவர்களின் கூட்டாளிகளும் உடைமை கொண்டோ கட்டுப்படுத்தியோ வரும் பிற முக்கியத்துவம் குறைந்த தொழில்கள் ஓரளவு தேசியமயமாக்கப்படலாம்; அரச-தேச கூட்டுமுதலீடின் அடிப்படையில் நடத்தப்படலாம்; அல்லது முழுக்கவும் திறமையான பிலிப்பைனியத் தொழில்முனைவர்களிடமே அவை விடப்படலாம்.

தேசியமாக்குதல் என்பது,

பிலிப்பைன் மக்கள் தமது பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கான கூட்டு உறுதியைக் காட்டுவதாயிருக்கும்;

ஒருசிலரான அந்நிய ஏகாதிபத்தியவாதிகள், அவர்களின் கூட்டாளிகள் ஆகியோரின் கைகளிலிருந்து அடிப்படையான உற்பத்தி, பங்கீட்டுச் சாதனங்கள்மீதான கட்டுப்பாட்டை அகற்றி, மக்களின் கைகளுக்கு மாற்றுவதைக் குறிப்பதாயிருக்கும்;

இன்றைய அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தின் ஏற்றுமதி-இறக்குமதித் தன்மையை உடைப்பதாயிருக்கும்;

விவசாய நவீனமயமாக்கத்தைத் துரிதப்படுத்துவதாயிருக்கும்;

ஒட்டுமொத்தமான முறையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பொருளாதாரத்தை உந்திவிடுவதாயிருக்கும்.

தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்கள், அரசுவாரியங்களின் கண்காணிப்பின்கீழ் இருக்கும். இதில் அரசாங்க அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் அடங்கியிருப்பார்கள். முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு இது பொறுப்புக்கூற வேண்டியதாயிருக்கும்.

ஏகாதிபத்தியச் சக்திகளுக்குச் சேவை செய்வதும் அதிகாரவர்க்க தனிச்சலுகைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதுமாகிய எல்லா தனியார் ஏகபோக நிறுவனங்களையும் ஜனநாயகக் கூட்டணியரசாங்கம் கலைத்துவிடும். மக்களின் ஜீவிதத்தின் மீதும் நல்வாழ்வின்மீதும் தனியார்துறை எந்தவிதமான ஏகபோகக் கட்டுப்பாடு செலுத்தப்படுவதும் அனுமதிக்கப்படாது. தேசத்தின் உற்பத்தித் திறமையும் மூலதனத்திட்டத்தையும் அதிகரிக்கும் பணியில் நல்லமுறையில் செயல்படும் தனியார் தொழில்வளங்கள் அவர்களின் செல்வமும் திறமையும் மேலும் சிறப்பாய் பயன்படக்கூடிய புதிய பொருளாதாரத்துறைகளில் புக ஊக்குவிக்கப்படுவார்கள். தொழில் அல்லது விவசாய வளர்ச்சிக்கு அவர்கள் செய்யும் தனிப்பட்ட பங்களிப்புகளுக்குத் தக, போட்ட முதலுக்கு நியாயமான வருவாய் அல்லது நட்டஈடு அவர்களுக்கு திரும்பக்கிடைப்பது உறுதி செய்யப்படும்.

வங்கித் தொழிலைப் புதிய அரசாங்கம் தேசியமயமாக்கும். மக்களின் சேமிப்புகள் பாதுகாக்கப்படும். அவை, உழவையும் தொழிலையும் வளர்க்க சிக்கனமாய் செலவழிக்கப்படும். ஏகாதிபத்தியச் சக்திகளின் நேரடி முகவர்களாயில்லாத வங்கிப்பங்குதாரர்களுக்கு நியாயமான நட்டஈடு தரப்படும். அவர்கள் தம் முதலையும் பிற வளங்களையும் தொழில்துறை வளர்ச்சிக்குத் திருப்பிவிட ஊக்குவிக்கப்படுவார்கள். ஏனெனில் ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பொருளாதாரமானது பரந்த வாய்ப்புகளை உருவாக்கியிருக்கும். அரசு விதிக்கும் நிபந்தனைகளின்படி அந்நிய வங்கிகள் நட்டஈடுபெறும்.

ஏற்றுமதி - இறக்குமதி வணிகத்தின் ஜீவாதாரமானதுறைகள் தேசியமயமாக்கப்படும். பொருளாதாரம் தற்சார்படைவதைத் துரிதப்படுத்தும் வகையிலான இறக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிகள் மேற்கொள்ளப்படும். உற்பத்தியானது முதலில் உள்நாட்டுச் சந்தையை நிறைவு செய்வதையே நோக்கமாகக் கொள்ளப்படும். ஏற்றுமதிகளால் கிடைக்கும் வருமானம் உள்நாட்டில் உடனடியாய்க் கிடைக்காத அத்தியாவசிய முதல் பொருட்களையும் கச்சாப் பொருள்களையும் இறக்குமதி செய்யவே முதன்மையாய்ப் பயன்படுத்தப்படும்.

பெட்ரோலிய சுத்திகரிப்பு, பங்கீடு உட்பட்ட எரிசக்தித்துறை தேசியமாக்கப்படும். எரிசக்தி உற்பத்தியில் நாட்டை தன்னிறைவாக்குவதும், தொழில்துறைக்கும் பொது மக்களுக்கும் நியாய விலையில் எரிசக்திப் பொருட்கள் கிடைக்கச் செய்வதும் இதன் நோக்கமாயிருக்கும். அதேசமயம் அரசு, உள்நாட்டு மூலப்பொருள்களிலிருந்து செலவு குறைந்த எரிபொருட்களைத் தயாரித்து உபயோகத்துக்கு விடும்.

ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் நவீனமான போக்குவரத்துத் தொழிலைக் கட்டப் பாடுபடும். பொதுமக்களுக்கும் பொருளாதாரத் துறைகளுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் இத்தொழில் நடத்தப்படும். பன்னாட்டு டயர்கம்பெனிகளும், வாகனத் தயாரிப்பு கம்பெனிகளும் தேசியமயமாக்கப்படும். போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படும் ரப்பர், கண்ணாடி, உலோக, மின்சார, பொறியியல் தொழில்கள் உள்நாட்டில் வளர ஊக்கம் தரப்படும். சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் தொடர்வண்டிப் பாதைகள் அமைக்கப்படும். தேர்ச்சிபெற்ற தேசியத் தொடர் வண்டி அமைப்பு உருவாகாதவாறு நீண்டகாலமாக சதிசெய்து தடுத்துவரும் ஏகாதிபத்திய சக்திகளின் நெடுங்காலச் சதிமுறியடிக்கப்படும். அவற்றின் விலையுயர்ந்த கார்கள், டிரக்குகள் மற்றும் உதிரிப்பாகங்கள் போன்றவற்றை விற்பதற்காகவே இச்சதியை அவை செய்துவந்திருக்கின்றன.

ஜீவாதாரமானதும் ஏகபோக நிறுவனங்களில் இயல்பாகவே கட்டுப்படுத்தப்பட்டிருப்பதுமான தொடர்புசாதனத் தொழில் தேசியமயமாக்கப்படும். போக்குவரத்துக்கும் செய்தித் தொடர்புக்கும் தீவுகளிடையே வணிகம் நடைபெறுவதற்கும் கப்பல்கள் தேவை. புதிய அரசாங்கம் நவீனக் கப்பல் தொழிலை உருவாக்குவதில் முன்னணியில் நிற்கும். பிலிப்பைன்ஸ் போன்ற தீவுக்கூட்ட நாட்டில், தேர்ச்சி பெற்ற நவீனக் கப்பல்தொழில் வளர்ச்சி பெறுவது முதன்மை முக்கியம் வாய்ந்ததாகும்.

பன்னாட்டு மருந்துக்கம்பெனிகள் தேசியமயமாக்கப்படும். விலை உயர்ந்த வெளிநாட்டு மருந்துகள் விற்பது தடை செய்யப்படும். உள்ளூர்ப் பொருட்களைக் கொண்டு மருந்துகள் செய்வதற்கு முதலிடம் தரப்படும்.

நாட்டைத் தொழில்மயமாக்கும் திட்டத்தின் முதுகெலும்பு போன்ற உருக்குத் தொழிலை வளர்ப்பதற்கு உயர்ந்த இடம் அளிக்கப்படும். நாட்டின் ஒட்டுமொத்த மூலவளம் பாதுகாக்கப்பட்டு, உலோக, ரசாயன, பொறியியல் தொழில்கள் சீராக வளர்ச்சிபெறப் பயன்படுத்தப்படும். உற்பத்திச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழில்துறை தீவிரமாக வளர்க்கப்படும். அப்போதுதான் நாட்டின் உற்பத்தியாற்றலையும் உற்பத்திச் சாதனங்களையும் விரைவாக மேம்படுத்த முடியும்.

ஏகாதிபத்தியம் கட்டுப்படுத்தும் சர்வதேச நிதி (ஐ. எம். எப்.) போன்ற நிதி நிறுவனங்கள் விதிக்கும் மோசமான நிதிக் கொள்கைகள் உள்நாட்டுத் தொழில்களைத் திவாலாக்குவன; உற்பத்தியை முடக்குவன; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பரவலாக்குவன; கிடைக்கிற உள்நாட்டு கடனைச் சுருட்டிக்கொள்ளும் நிறுவனங்களுக்கு மட்டுமே லாபம் பயப்பன. இத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைய நிதிநிறுவனங்களின் தொடர்பை புதிய அரசாங்கம் துண்டித்துக்கொள்ளும். புதிய அரசாங்கத்தின் பண - நிதிக் கொள்கை, பொருளாதார வளர்ச்சியையும் தேசியத் தொழில்மயமாக்கத்தையும் விவசாயக் கூட்டுறவுமயமாக்கத்தையும் நவீனமயமாக்கத்தையும் ஊக்குவதாயிருக்கும்.

எல்லா வரிச்சுமைகளையும் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ஒழித்துக்கட்டும். குறிப்பாக உழைக்கும் மக்களின் மீதும் குறைந்த வருமானமுள்ள மக்களின்மீதும் சுமத்தப்பட்டுள்ள வரிப்பளு அகற்றப்படும். மக்களின் வருமானம், உற்பத்தி ஆகியவற்றுக்கேற்ப அவசியமான வரிகளைமட்டும் விதிக்கும். தேசியமயமாக்குதலாலும் பறிமுதல்களாலும் அரசு நிதிகள் அதிகரிக்கப்படும். அனுவசியமான, பொருளுற்பத்தியற்ற திட்டங்களில் அரசு கண்டிப்பாக ஈடுபடாதிருந்து பொருளை மேலும் மிச்சப்படுத்தும்; இன்றைய ஒட்டுண்ணித்தனமான பெரும் பிற்போக்கு ஆயுதப்படைகளை புதிய அரசாங்கம் ஒழித்துவிடும். தேவையான அளவில்மட்டுமே ஆயுதப்படைகளை வைத்திருக்கும். இப்படைகளுக்கு, மக்களின் குடிப்படை செயலூக்கமுள்ள பக்கபலமாயிருக்கும். தேசத்தின் பாதுகாப்புக்கு இவை அவசியம்.

சமத்துவம், பரஸ்பர நன்மை என்ற அடிப்படையில் அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுடனும் வணிக, பொருளாதார உறவுகள் வைத்துக்கொள்ளப்படும்.

பொருளாதாரத்தில் சமநிலை கெடாதிருக்கவும்; கனரக, நடுரக, சிறுரகத் தொழில்களிடையேயும், கனரகத் தொழிலுக்கும் விவசாயத்துக்குமிடையேயும், மூலதனத் திரட்டலுக்கும் நுகர்வுக்கும் இடையேயும் சமச்சீரான வளர்ச்சி ஏற்படவும் வேண்டி, ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் அரசுத்திட்டம் வகுத்துச் செயல்படுத்தும். பூகோள ரீதியில் பொருளாதார முன்னேற்றம் சீராய்ப் பரவுவதற்காக மத்தியப்படுத்தப்பட்ட வளர்ச்சியையும் பிரதேச வளர்ச்சியையும் கலந்து நடத்துவதை உறுதிசெய்யும். சந்தைச் சக்திகளை அரசுத் திட்டத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும்.

நமது நாட்டில் வளங்கொழிக்கும் இயற்கைச் செல்வங்களும், உழைப்பூக்கமும் கல்வியறிவும்கொண்ட பெரிய மக்கள் கூட்டமும் உள்ளன. ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகாரவர்க்க முதலாளியம், ஆகிய தளைகள் முற்றாக உடைக்கப்பட்டதும் புதிய பிலிப்பைன்ஸ் நிச்சயம் பொருளாதார - சமூக ரீதியில் முன்னேற்றம் காணும்.

**9. ஜனநாயக அரசதிகாரத்தை நிறுவிய உடனடியாக வேலை உரிமைக்கு உத்திரவாதம்; மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல், சமுகநல காரியங்களை விரிவுபடுத்தல்**

பணவீக்கம், பண்டங்களின் பற்றுக்குறை, உற்பத்தி வீழ்ச்சி, ஊகவாணிகம் போன்ற கேடுகளை பிற்போக்கு அரசாங்கத்தின் சீரழிவாலும் இறுதி வீழ்ச்சியாலும் கொண்டுவரப்பட்டுள்ளன. புதிய அரசாங்கத்தின் ஆரம்ப ஆண்டுகளிலும் இந்நிலை நீடிக்கும் என எதிர்பார்க்கலாம். அரசியல் அதிகாரத்தைச் சட்டபூர்வமாகப் பிரயோகிப்பதன் மூலமும், கூடிய சீக்கிரத்தில் உற்பத்தியை மீண்டும் துவங்குவதன் மூலமும் இந்தப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தித் தீர்வுகாணக் கூட்டணி அரசாங்கம் உடனடியாக தீர்மானகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். புதிய அரசு புனர்நிர்மாண, மறுவாழ்வு நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலத்துக்கு மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

எல்லாத் தொழில் நிறுவனங்களும் இயல்பு நிலைக்குத் திரும்பி உடனடியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உற்பத்தியை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் எடுக்கும். உடைமையாளர்கள், மேலாளர்கள், தொழில்நுட்பமறிந்தோர் ஆகியோருக்குத் தகுந்த உத்திரவாதங்களும் ஊதியங்களும் தரப்படும். அத்தியாவசிய உபயோகப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அவற்றின் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காகக் கூடுதல் மூலதனம் வழங்கப்படும். தூக்கியெறியப்பட்ட அரசாங்கத்தின் பணித்துறை ஊழியர்கள் கடுமையான குற்றங்கள் இழைத்தவர்கள் தவிர - தம் அலுவல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு மக்களுக்குச் சேவைசெய்யும்படி வலியுறுத்தப்படுவார்கள்.

புதிய அரசாங்கம் விவசாய வரிகளையும் விவசாயப் பண்டங்களின் விலைகளையும் நியாயமான முறையில் நிர்ணயிக்கும். நிலச்சீர்திருத்தத்தின் பயன்களை விவசாயிகள் உடனடியாக அனுபவிக்கவும், தமது உபரிப் பண்டங்களை சுதந்திரமாயும் ஆதாயகரமாகவும் அவர்கள் விற்பனைசெய்து கொள்ளவும் அனுமதிக்கும். இவற்றை உற்பத்தி செய்யாத நகரவாசிகள் போன்றோருக்கும் போதிய உணவு, தானியப் பொருள்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

புதிய அரசாங்கம் ஒரு ஊதியக் கொள்கையை வகுக்கும். அது தொழிலாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகவும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதாகவும் உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்துவதாகவும் இருக்கும். பேசோ[8]வின் செலாவணி மதிப்பைப் பதுகாப்பதில் உரிய கவனம் செலுத்தப்படும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும் பன்னாட்டுக் குழுமங்களின் ஏகபோகத்தை உடைப்பதன் மூலமும், தொழில்களுக்குத் தேவையான முதலீட்டுக்கான செலவைக் குறைப்பதால் விலைகூடிய இறக்குமதிகளை நாடு சார்ந்துள்ள நிலைமையைக் குறைப்பதன் மூலமும், விலைகள். (குறையாவிட்டாலும்) ஏறுதவாறு செய்யப்படும்.

கனரகத் தொழில்களைவிட சிறுரகத் தொழில்களுக்கு முதலீடுகள் முன்னதாகக் கிடைக்கும்படி புதிய அரசாங்கம் பார்த்துக் கொள்ளும். அப்போதுதான் அதிக நுகர் பண்டங்களை வழங்கவும், அதிக வேலை வாய்ப்பு தரவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், விரைந்த வேகத்தில் மூலதனம் திரட்டவும் முடியும். கனரகத் தொழில்கள் உட்பட பொருளாதாரத்தைப் படிப்படியாக சமச்சீராக வளர்க்கக் கூடிய தொடர்ச்சியான ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிலிப்பைனியர் தாய்நாட்டை விரைவாக மறுநிர்மாணம் செய்வதில் தம் திறமைகளையும் வசதிகளையும் தியாகவுணர்வுடன் ஈடுபடுத்துவதை புதிய அரசாங்கம் ஊக்குவிக்கும்.

இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் தம் சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்ப புதிய அரசாங்கம் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும். அல்லது அவர்கள் உழைத்துப் பிழைக்கத்தக்க புதிய இடங்களுக்குச் செல்லவும் உதவும். போரில் இருபுறமும் முடக்கப்பட்ட வீரர்களுக்கு, உழைத்து கண்ணியமாக வாழ வாய்ப்புகள் தாராளமாய் வழங்கப்படும்.

மக்களுக்கான சமூக சேவைத் திட்டங்களையும் புதிய அரசாங்கம் நிறைவேற்றும். உதாரணமாக வீட்டு வசதி, சமூகப் பாதுகாப்பும் நிவாரணமும் போன்றன. ஊனமுற்றோர்-முதியோர் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். அடிப்படையான வாழ்க்கை வசதிகள் கூட இல்லாமல் எந்த மனித ஜீவனும் தவிக்க விடப்படமாட்டாது. இதை அரசு

8 பிலிப்பைன்ஸ் நாட்டு நாணயம்.
(மொழிபெயர்ப்பாளர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புகளும் மக்கள் அமைப்புகளும் சேர்ந்து கவனித்துக் கொள்ளும்.

ஒரு முழுமையான நலப் பராமரிப்புத் திட்டம் உருவாக்கப்படும். ஆரம்ப சுகாதாரத்துக்கு அதில் முக்கியம் தரப்படும். நவீன மருத்துவத்துடன் மரபு மருத்துவம் இணைக்கப்படும். ஒரு தேசிய உடல்நலத்துறை காலப்போக்கில் உருவாக்கப்படும். அதன் மூலம் புதிய அரசாங்கம் அனைவருக்கும் நல்வாழ்வு கிடைக்கச் செய்யும்.

நாட்டின் இயற்கைச் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். தேச வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்வுக்கும் உகந்த முறையில் அது பேணப்படும்.

### 10. தேசிய, அறிவியல் ரீதியான, மக்கள் சார்புப் பண்பாட்டை ஊக்குவித்தலும் இலவச பொதுக் கல்வியை உத்திரவாதம் செய்தலும்

தேசமுழுவதும் தேசிய, அறிவியல் ரீதியான, உண்மையான மக்கள் பண்பாட்டை வளர்க்க ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் தன்னால் இயன்றதனைத்தையும் செய்யும். கல்வி முறை மூலமும் செய்தித் தொடர்பு சாதனங்கள் மூலமும், மக்களிடையே நேரடிக் கல்வி இயக்கங்கள் நடத்துவதன் மூலமும் இப்பண்பாடு பரப்பப்படும்.

புதிய அரசாங்கம் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கும். கல்வி உரிமை மக்களின் அடிப்படை உரிமையாக இருக்கும். கல்வி என்பது பிரதானமாய் அரசின் கடமையாக இருக்கும். அனைத்து பிலிப்பைனியருக்கும் ஆரம்ப-நடுநிலை - உயர்நிலைக் கல்வி இலவசமாய்க் கிடைக்க அது நடவடிக்கைகள் எடுக்கும். அதே போது உயர்நிலைக் கல்வி தனியார் நிறுவனங்கள் மூலமும் நடக்க அனுமதிக்கப்படும். ஆயினும் உயர்குடித்தனத்தின் எச்சங்கள், கல்வித்துறையில் அநியாயமான ஆதாயத் தேட்டம் போன்றவை ஒழித்துக் கட்டப்படும். பரந்துபட்ட அளவில் கல்வி இயக்கங்கள் நடத்தப்படும். அதன் மூலம் கடந்த காலத்திலிருந்த பாதக நிலைகளின் காரணமாகப் பின்தங்கிக் கிடக்கிற மக்களிடையிலும் புதிய பண்பாட்டைக் கொண்டு செல்ல முயற்சி செய்யப்படும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் கல்வியின் தரம் இடையருது உயர்த்தப்படும். பழைய ஏகாதிபத்தியப் பண்பாட்டின் தாக்கங்கள் அகற்றப்படும். வெளிநாடுகளின் முன்னேறிய மிக நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பங்களையும் நம் நாட்டிற்கு ஏற்ற முறையில் விவேகத்துடன் எடுத்துக் கொள்ளப்படும். தேசத்தின் அனைத்தும் தழுவிய வளர்ச்சிக்கும் மக்களின் நலன்களுக்கும் பணியாற்ற உதவும் விதமாய் கல்வி செயல்படுத்தப்படும்.

சமூக விஞ்ஞானங்களில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பிலிப்பைனிய வரலாற்றையும் சமுதாயத்தையும் நெறியாளுகை செய்யும் விதிகள் பற்றி சரியான புரிதல் இருக்கும்படி புது அரசாங்கம் பார்த்துக் கொள்ளும். நமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை எப்படித் தீர்க்க முடியும் என்பதை சமூக விஞ்ஞானம் சார்ந்தவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்யும். இயற்கை விஞ்ஞானங்கள், பொறியியல், தொழில்நுட்பம் போன்றவற்றில் இருப்பவர்கள் தேசியத் தொழில் மயமாக்கத்துக்கும் விவசாய வளர்ச்சிக்கும் வழிகாட்டுமாறு செய்யப்படுவார்கள். எழுத்தாளர்களும், கலைஞர்களும் உணர்வைத் தட்டி எழுப்புவதும் தரமிக்கதுமான படைப்புகளைப் படைக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். அப்படைப்புகள் சமூக யதார்த்தங்களையும் மக்களின் போராட்டங்களையும் பிரதிபலிக்க வேண்டும். மக்களின் நலத்தை மேம்படுத்தக் கூடிய சகல விளையாட்டுகளும் உடற்பயிற்சிகளும் சொல்லித்தரப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிலிப்பினோ மொழியை தேசமுழுவதன் அதிகாரபூர்வ மொழியாக ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் உயர்த்தும். வட்டாரங்களில், வட்டார மொழிகள் செழிக்கவும் ஆவன செய்யும். நமது பண்பாட்டு மரபு பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும். எல்லாப் பிலிப்பைனியரும் குறிப்பாக இளைஞர்களும் கடந்த காலத்திலிருந்து கற்று நிகழ்காலத்துக்குச் சேவை செய்யுமாறு ஊக்குவிக்கப்படுவார்கள்.

**11. மோரோ, கொர்டிலேரா மக்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர்களின் சுய நிர்ணய உரிமையை மதித்துப் பேணுதல்**

ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் பிலிப்பைன்சில் வாழும் எல்லா மக்கள், தேசிய இனங்கள், சிறுபான்மை இனங்களின் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் பேணுவதைப் பொதுவிதியாகக் கொண்டிருக்கும்.

மோரோ மக்களின் சுயநிர்ணய உரிமையையும் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையையும் அது அங்கீகரிக்கும்; அவர்களுக்கு அரசியல், பொருளாதார சமுதாயத்துறைகளில் சம உரிமைகளை உத்திரவாதம் செய்யும். அவர்களின் வாழ்க்கைப் பாணியைப் பாதுகாக்கும். சுயேச்சையான அரசியல் ஆட்சியாக விளங்க அவர்களுக்குள்ள உரிமையை மதிக்கும்.

அதுபோலவே கொர்டிலேரா மக்கள் மற்றும் பிற அனைத்து சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளையும் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் பேணும்; அனைத்துத்துறைகளிலும் அவர்கள் முன்னேற உதவும். அவர்களின் சொந்தத்தீர்மானங்களுக்கும் சூழல்களுக்கும் தக இது அமையும். தேசத்தின் பிற பகுதிகளுடன் சமமாய் முன்னேற தேவையான ஆதரவை அரசாங்கம் அவர்களுக்கு வழங்கும்.

சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பான்மையாக விளங்கும் பகுதிகளில் வட்டார அரசாங்கத்தில் அவர்களுக்கு முதன்மையான இடம் தரப்படும். பல்வேறு இன மக்கள் வாழும் பகுதிகளில் பிரதிநிதித்துவ விகிதாச்சாரம் செயல்படுத்தப்படும். அரசாங்கத்தின் உச்சமட்டத்திலும் அவர்கள் தம் பிரதிநிதிகளைப் பெற்றிருப்பார்கள்.

புதிய அரசாங்கம் சிறுபான்மை இனத்தவர் தத்தம் பகுதிகளில் தமக்குரிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முழு ஊக்கம் தரும். அரசாங்கம் முதலீட்டுத் தொழில்நடத்தும் துறைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படும். அவர்களின் சமூகம் விரைவில் முன்னேறுவதற்காக தொழில் நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் வருவாய்கள் அதிகமாக கிடைக்கும்படி பார்த்துக் கொள்ளப்படும்.

சிறுபான்மையினரின் பண்பாடு பாதுகாக்கப்பட்டுப் பேணப்படும். பிலிப்பைன்சின் பல்வேறுபட்ட வட்டாரப் பண்பாடுகளின் வரிசையில் அவற்றிற்குரிய கண்ணியமான இடம் தரப்படும். அதே சமயம் எல்லாத் துறைகளிலும் நவீன கல்வி பெற அவர்களுக்கு சகல வாய்ப்புக்களும் வழங்கப்படும். வட்டார மக்களிடம் இருந்து உருவாகும் ஊழியர்கள் தம் பண்பாட்டை மேலும் வளர்ப்பதிலும், தம் சமூகங்களை புரட்சிப் பாதையை நோக்கி மேலும் உயர்த்துவதிலும் முன்னணியில் நிற்குமாறு ஊக்குவிக்கப்படுவார்கள்.

**12. புரட்சிகரமான, சுதந்திரமான, சமாதான நாட்டமுள்ள வெளிநாட்டுக் கொள்கையை மேற்கொண்டு செயல்படுதல்.**

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பல நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களும் புரட்சிக் கட்சிகளும் அரசாங்கங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளும் முதலாளிய ஏகாதிபத்திய நாடுகளின் உழைக்கும் மக்களும் நடத்தும் உலகு தழுவிய போராட்டத்தின் பகுதியாக நமது மக்கள்போரானது விளங்குகிறது. அவர்களின் சாதனைகள் நமது புரட்சி இயக்கம் முன்னேற உதவுகிறது. அதுபோலவே நமது போராட்டம் அவர்களின் வெற்றிகளுக்குப் பங்களிப்பு செய்கிறது.

தற்சார்பு என்ற அடிப்படைக் கொள்கையில் நின்றே நாம் மக்கள்போரை நடத்தி வருகிறோம். அதேசமயம் சர்வதேச ஆதரவையும் நம் போராட்டத்தின் பகுதியாக நாம் கருதுகின்றோம். ஆகவே வெளிநாடுகளின் புரட்சி இயக்கங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் அரசியல் பொருளாதார உதவியை நாம் நாடுகிறோம். நமக்கு அத்தகைய ஆதரவை வழங்குவோர் பிலிப்பைன் புரட்சியுடையவும் மக்களுடையவும் உண்மை நண்பர்களாகத் தம்மை நிரூபித்துக் கொள்கிறார்கள். இருப்பினும், எந்த இலட்சியங்களுக்காக நம் மக்கள் தீரத்துடன் போராடி வருகிறார்களோ அந்த தேசிய இறைமையையும் சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் ஏதேனும் அந்நிய சக்திகளிடம் ஒரு போதும் நாம் விற்று மேற்படி உதவியைப் பெற முயல்வோராக ஆகமாட்டோம்.

கொள்கையையோ சமூக அமைப்பையோ பாராமல் உலகின் எல்லா நாடுகளுடனும் ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ராஜதந்திர, வணிக உறவுகளை வைத்துக் கொள்ளும். ஒருவர் மற்றவர் இறைமையையும் சுதந்திரத்தையும் பிரதேச ஒற்றுமையையும் பரஸ்பரம் மதிப்பது, சாத்தியப்பட்ட எல்லாத்துறைகளிலும் இருதரப்பும் சமமாய் நன்மை அடைவது என்ற முறையில் அவ்வுறவுகள் அமையும்.

வெளிநாட்டில் வாழும் எல்லா பிலிப்பைனியரையும் - அவர்கள் அங்கு குடியேறி வசிப்போராயினும் நிரந்தரமாய் தங்கிவிட்டவராயினும் - அவர்களின் உரிமைகளைப் புதிய அரசாங்கம் பாதுகாக்கும். தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ பிலிப்பைன்சுக்குள் வாழும் எல்லா வெளிநாட்டவரின் உரிமைகளுக்கும் அது மதிப்பளிக்கும்.

மூன்றும் உலக நாடுகளோடும் புதிய பிலிப்பைன்ஸ் நட்பும் அந்நியோந்நியமும் மிக்க உறவுகளைக் கொண்டிருக்கும். முதலாளிய நாடுகளோடும் அது நெருங்கிய உறவு கொள்ளும். பிலிப்பைன்சுக்குள் தன் ஏகாதிபத்தியச் சலுகைகளை அமெரிக்கா கைவிட்டு விடும் பட்சத்தில் புதிய பிலிப்பைன்ஸ் சாதாரண ராஜதந்திர, வணிக உறவுகளை அந்த நாட்டோடும் வளர்த்துக் கொள்ளும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின் (ASEAN) பிற்போக்குச் சக்திகளை அகற்ற மக்கள் ஜனநாயகச் குடியரசு பாடுபடும்; தென் கிழக்கு ஆசிய நாடுகள் சுதந்திரமாகவும், எந்த ஏகாதிபத்திய சக்தியின் குறுக்கீடும் இல்லாமலும், அந்நிய ராணுவத் தளங்களையோ அணு ஆயுதங்களையோ தம் பிரதேசத்தில் கொண்டிராமலும் சுயமாய் வளரும் சூழலை உருவாக்கப் பாடுபடும்.

புதிய பிலிப்பைன்ஸ் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கும். பிற நாடுகளின் புரட்சிப் போராட்டங்களுக்கு உதவ முயலும். புதிய பொருளாதார அமைப்புக்காகப் போராடும் இயக்கத்தில் தீவிரமாய்ப் பங்கேற்கும். நாடுகளின் இறைமை, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டுவதும், சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் காப்பாற்றவும் ஐ. நா. சபை போன்ற சர்வதேச அமைப்புகள் வகுக்கும் தீர்மானங்களையும் முடிவுகளையும் புதிய பிலிப்பைன்ஸ் ஏற்றுச் செயல்படுத்தும்.

தமிழில் : **பா. சிங்கராயர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடந்த மூன்றுண்டு அனுபவத்தை படிப்பினையாக கொள்ளுவோம்

தமிழ் மக்களின் பிரச்சினை முழுமையான உள்நாட்டு யுத்தம் என்ற வடிவம் பெற்று மூன்றுண்டுகளாகிவிட்டன. மூன்றுண்டுகள் எப்படியோ உருண்டோடி விட்டது. 1983 ஜுலையில் 13 ராணுவவீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை மேலும் அதிகரித்து உச்சகட்டத்தை யடைந்தது. நாடு பரந்தளவில் நடந்த இனக்கலவரமானது தமிழ் இளைஞர்கள் இயக்கங்களை நோக்கிச் செல்ல ஏதுவாயிற்று. 1983 ஜுலையில் வெளிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ்ப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இந் நிகழ்ச்சிகளின் தாக்கத்தினுல் உந்தப்பட்ட இளைஞர்கள் இயக்கங்களை நோக்கி பெருமளவில் வந்தனர். இயக்கங்களும் ஆசை வார்த்தைகளை உதிர்த்து, பயிற்சிக்கு பெருமளவில் இளைஞர்களை தமிழ் நாட்டிற்கு அழைத்துச் சென்றனர். இயக்கங்களிடம் தொடர்ந்து எப்படி போராட்டத்தை முன்னெடுப்பது என்பதற்கான திட்டமோ வேலைகளை தொடர்ந்து நகர்த்தும் ஆற்றலோ இன்றி பயிற்சிக்கு பெருமளவில் ஆட்களை சேர்த்துக்கொண்டனர். இதன் காரணமாக பல்வேறு சிக்கல்களை முகாம்களில் சந்தித்தனர். இச்சிக்கல்களை தீர்க்க திராணியற்றமையால் தவருன, மோசமான வழிமுறைகளை கையாண்டனர். தமது சொந்த மண்ணை மீட்டெடுக்க, தமது வாழ்வை தியாகம் செய்து புறப்பட்ட பல போராளிகள் அந்நிய மண்ணிலே அநியாயமாக அனுதைகளாக கொல்லப்பட்டனர். தெருவோரங்களில், சாக்கடைகளில் கடலில் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டது எவ்வளவு கொடுமையானது; வேதனைக்குரியது.

1983 ற்கு முன்னர் வெறும் தனிநபர்களை அழிப்பதனையே தமது அரசியல் நடவடிக்கையாக கொண்ட ராணுவ நடவடிக்கைகளேயிருந்தன. 1983 ற்குப் பின் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகள் என்ற கட்டத்திற்கு போராட்டம் நகர்ந்தது. எமது போராட்டத்தில் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கை ஓர் முக்கிய போராட்ட வடிவம் என்பதனை நாம் முன்பு பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேம். அன்று நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகளை சில இயக்கங்கள் முற்றுகவே நிராகரித்தன. அன்று நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டாலும் இதிலிருந்து மேற்கொண்டு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏற்றவகையில் மக்கள் தயாரிக்கப் படவில்லை. மக்கள் உணர்வு பூர்வமாக வளர்த்தெடுக்கப்பட்டு அமைப்பு வடிவிற்குள் கொண்டுவரப்பட்டு போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட வில்லை. இந்த அடிப்படையில் அன்றைய நடவடிக்கைகள் முழுமை பெருதவையாக முதிர்ச்சியற்ற காலத்திற்கு முந்தியவையாக அமைந்தன. இதன் காரணமாகவே இந்நடவடிக்கைகள் சில சமயங்களில் எதிரிக்கு சாதகமாகவும் அமைந்தன. எமது போராட்டத்தில் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கையானது முக்கியமானதும், தேவையானதுமாகும். ஆனுல் இது மட்டுமே முழுமக்கள் போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு போதுமானதல்ல. எப்போதும் தலைவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவிட்டு அவர்கள் அங்கு பேசி தமது வாதத்திறமையால் உரிமைகளை பெற்று வருவார்கள் என எதிர்பார்த்த தமிழ்மக்கள் மீண்டும் இளைஞர்களை எதிர்பார்த்ததில் வியப்பொன்றும் இல்லை. எமது போராட்டம் படிமுறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக வளர்க்கப்பட்டு ஆயுதப் போராட்டம் என்ற கட்டத்திற்கு வளராது திடீர்பாய்ச்சலாகவே அமைந்தது. அரசியல் போராட்டத்தின் வளர்ச்சி ஆயுதப் போராட்டம் என்ற நிலை இங்கிருக்கவில்லை. கடந்த கால பாராளுமன்ற அரசியலின் வங்குரோத்துத்தனம் ஆயுதப்போராட்டம் என்ற கட்டத்திற்கு இளைஞர்களைத் தள்ளியது. இயக்கங்களும் வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்கள் என்பதை உணராது சில கதாநாயகர்களால் வரலாற்றை உருவாக்க முடியும் என நம்பினர். ஒருசில இயக்கங்கள் தவிர ஏனையவை. முழுக்க முழுக்க மக்களிலிருந்தும் மண்ணிலிருந்தும் அந்நியப்பட்டன. சொந்தப் பலத்தில் எமது மக்களின்மீது நம்பிக்கையற்று அந்நிய சக்திகளின்மீது நம்பிக்கை வைத்தனர். சில இயக்கங்கள் அந்நிய நாட்டின் கூலிப்படையாக கூட மாறத் தயாராயிருந்தனர். இதனை நாம் சில இயக்கத் தலைவர்களின் அறிக்கைகளிலிருந்தே புரியக் கூடியதாயுள்ளது. எமது மக்களும் தமது பலத்தை, தமது பணியை உணராது அந்நிய சக்திகளின் மீது நம்பிக்கை கொண்டனர். சில இயக்கங்கள் அந்நிய உதவியுடன் தமிழீழம் கிடைக்கும் திகதிகூட கருத்தரங்குகளில் தெரிவித்தன. இவற்றை நம்பிய மக்கள் ஏமாற்றமடைந்து விரக்தி நிலையடைந்தனர். இயக்கத் தலைமைகளோ பலவித பொய்களை சொல்லி கீழணிகளை ஏமாற்றின. சில இயக்கங்கள் இராணுவத்திற்கெதிராக பல்வேறு அளவுகளில் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டன. சில சாத்தானில் நம்பிக்கைகொள்ளள இன்னமும் சில பெரிய படையைக் கட்டிச்சென்று திடீர்த்தாக்குதல் நடத்தி தமிழீழத்தை விடுதலை செய்வதாக பிரச்சாரம் செய்தன. முன்பு செய்யப்பட்ட சகல ராணுவ நடவடிக்கைகளையும் தவறானவை எனவும் நகர்புற கெரில்லா நடவடிக்கை தேவையற்ற ஒன்று எனத் தெரிவித்த சில இயக்கங்கள் தாம் சில இராணுவ நடவடிக்கைகளை செய்தவுடன் அவை உன்னதமானவையாகவும், வரலாற்று முக்கியத்துவம் மிக்கவையாகவும் காட்டின. இது இவர்களின் சந்தர்ப்பவாதத்தைக் காட்டுகின்றது.

இயக்கங்களிற்குள் பலர் கேள்விகள் கேட்கத் தொடங்கினர். வெறும் மந்தைக் கூட்டமாக இருந்து தலைவர்கள் சொல்வதை நடைமுறைப்படுத்துவது என்பதை விடுத்து தாமும் கொள்கைகள், வேலை முறைகளை தீர்மானிப்பதில் பங்குபற்றுதல் வேண்டும் எனக் கோரினர். இயக்கத்திற்குள் ஜனநாயகத்தைக் கோரினர் - சில இயக்கங்கள் நேரடியாக இயக்க ஜனநாயகத்தை மறுத்து தனிநபர் தலைமையை வலியுறுத்தின. இன்னமும் சில ஜனநாயக மத்தியத்துவம் பற்றிப் பேசிக்கொண்டே தனிநபர் அல்லது சிறு குழு முடிவைச்செயற்படுத்தினர். ஆரம்பத்திலிருந்தே தனிநபரின் அரசியல் உரிமை மறுக்கப்பட்டு வந்தது. இயக்கத்தை விட்டு வெளியேறுவோர் ஏனைய இயக்கத்தில் இணையவோ புதிய இயக்கத்தை தோற்றுவிக்கவோ அனுமதியில்லை என்ற தவறான வழிமுறை பின்பற்றப்பட்டது. இதனையே பல இயக்கங்களும் நடைமுறைப்படுத்தின.

இயக்கங்களிடையேயான ஐக்கியம் என்பது மிகவும் போலியான ஒன்றாக இருந்தது. பலமான எதிரிக்கெதிராக நாம்பொது உடன்பாட்டில் ஒன்று சேர்ந்தால் மட்டுமே எதிரியை முறியடிக்க முடியும் என்பதை இயக்கங்கள் உணரத்தவறின. இயக்கங்களிடையே போட்டி மனப்பான்மை, காழ்ப்புணர்ச்சி என்பன மேலோங்கியிருந்தன. இவை காரணமாக குறுகிய குழுவாதத்தில் இயக்கங்கள் மூழ்கியிருந்தன. எமது சமூகத்தின் குறைம்சங்களான எல்லைச் சண்டை, சொத்துச் சண்டை, போட்டி பொறாமை, அவதூறு பரப்பல் என்பனவற்றின் பிரதிபலிப்புகளை இயக்க நடவடிக்கைகளிலும் காணக்கூடியதாக விருந்தது. இந்நிலையில் பொது உடன்பாட்டில் ஐக்கிய முன்னணி ஏற்படுவது சாத்தியமற்றதாக விருந்தது. போராட்டத்தில் ஏற்பட்ட சிக்கலும் இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் நடவடிக்கைகளும் கூட்டை ஏற்படுத்தின. இதன் விளைவாக ஈழ தேசிய விடுதலை முன்னணி EPRLF, EROS, TELO இனுல் உருவாக்கப்பட்டது பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளும் இதனுடன் இணைந்து கொண்டது. ENLF ஆனது எந்தவித குறைந்தபட்ச திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. இதனுல் இது வெளியில் ஐக்கிய முன்னணிபோல் தோற்றமளித்த போலியானதொன்ருக இருந்தது. ஒருவரை ஒருவர் எப்படி பயன்படுத்துவது என்பதிலேயே ஒவ்வொருவரும் அக்கறையாயிருந்தனர். மக்கள் கூட்டு உருவானதை முழு மனதோடு வரவேற்றனர். ஆனுல் இயக்கங்களோ மக்கள் நலனைவிட தமது குழு நலனை முதன்மைப்படுத்தியதால் தமக்குள் மோதிக்கொண்டனர். எதிரிக்கெதிராக திருப்பவேண்டிய துப்பாக்கிகளை ஒருவருக்கெதிராக மற்றவர் திருப்பினர். இதனுல் பல போராளிகள் அநியாயமாக அழிக்கப்பட்டனர். அண்மையில் நடந்த LTTE-TELO மோதல் நூற்றுக்கணக்கான போராளிகளை அழித்தொழித்தது. இரண்டு இயக்கங்களிற்கிடையே மோதல் ஏற்பட்டால் கூட்டில் உள்ள ஏனைய இயக்கங்கள் அவற்றை பேசிதீர்க்க முயற்சிக்காமல் ஏனையோரின் அழிவில் தாம் லாபம் சம்பாதிக்க முயன்றன. மௌனம் சாதிப்பதன் மூலம் தவருன நடவடிக்கைகளை மறைமுகமாக அங்கீகரிக்கும் நடைமுறையைப் பின்பற்றின. எமது போராட்டத்தில் ஏற்பட்ட இக்கசப்பான அனுபவங்கள் பெருமளவில் போராளிகளை இயக்கங்களை விட்டு வெளியேற வைத்துள்ளது. இயக்கங்களிற்குள் போராட்டம் நடத்திய பல போராளிகள் இன்று உயிருடன் இல்லை. பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். சரியான திசைவழியில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று விரும்பிய இவர்களிற்கு கிடைத்ததோ துரோகி, காட்டிக்கொடுப்போன், ஏனைய இயக்க ஏஜன்ட், சிங்கள அரசின் உளவாளி என்பன. சரியான ஸ்தாபனம் பற்றிய பார்வையின்மை, குழப்பம் என்பன காரணமாக உட்கட்சிப் போராட்டத்தை நடத்துவதில் யாரும் வெற்றி பெறவில்லை. பெரும்பாலான இயக்கத் தலைமைகள் இந்தியாவிலேயே இருந்தன. களத்தில் போராளிகளும் மக்களும் கஷ்டங்களை எதிர்கொள்ள தலைமைகள் இந்தியாவில் ஆடம்பரமாக வாழ்ந்தன.

அரசின் ராணுவ நடவடிக்கைகள் உச்சகட்டத்தையடைந்து பொது மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து எல்லைப்புற கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் அகதிகளாக வெளியேறினர். பலர் ஏனைய தமிழீழப் பகுதிகளிற்குச் சென்று அகதி முகாம்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர். இதைவிட பெருமளவில் மக்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்தச் சூழ்நிலையிலேயே கடந்த வருடம் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இப்பேச்சுவார்த்தை எமது மக்களின் தேவையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதாக கூற முடியாது. இந்திய, இலங்கை அரசுகள் மற்றும் அமெரிக்கா போன்றவற்றின் பிராந்திய தேவைகளிலிருந்தே இப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. பல சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. முழுமையற்ற யுத்த நிறுத்தமும் மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப் போராட்டப் பாதையில் பேச்சுவார்த்தைகள் வருவது சகஜமானதே. ஒரு விடுதலை இயக்கம் தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் எதிரியை அம்பலப்படுத்தவும் பேச்சுவார்த்தையை பயன்படுத்தலாம். இப்படியான பல அனுபவங்களை சர்வதேச விடுதலை இயக்கங்கள் பலவற்றின் வரலாற்றில் காணலாம். நாம் கடந்த 40 ஆண்டுகளில் பல பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகளை கண்டுள்ளோம். இம்முறை அரசு ஒரு புறம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு, யுத்த நிறுத்தம் என அறிவித்து விட்டு தன்னை சர்வதேச பிற்போக்கு சக்திகளின் துணைகொண்டு பெருமளவு ஆயுதங்களை பெற்று பலப்படுத்திக் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்கள் இச் சூழலைப் பயன்படுத்தித் தம்மைப் பலப்படுத்தியதை விட தம்முள் மோதிக் கொண்டதன் விளைவாக மேலும் பின்னடைவை ஏற்படுத்திக் கொண்டன.

மக்களைப் பொறுத்தவரை அவர்கள் என்றுமே பூரணமான பங்காளிகளாக மாறாத நிலையே இருந்து வந்தது. இயக்கங்களிற்கு முழு ஆதரவு வழங்கினார்கள். அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. இயக்கங்களின் தவறுகளை சுட்டிக் காட்டவே மக்கள் அஞ்சுமளவிற்கு நிலைமை மோசமாகியது. மக்கள் அமைதியான வாழ்வையே விரும்புகிறார்கள். பெரும்பான்மையான மக்கள் ஒரு தீர்வை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். மக்களின் நம்பிக்கையீனம் உருவாகி வளர்ந்ததற்கான காரணிகளைக் கண்டு அதனை நிவர்த்தி செய்வதே இன்று செய்யவேண்டிய உடனடிப் பணியாகும். இன்று வளர்ந்திருக்கும் போராட்ட உணர்வை மழுங்கடித்து தமக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தவே பிற்போக்கு சக்திகள் முனைகின்றன.

இந் நிலையில் கடந்த காலத்தில் உங்கள் அமைப்பு என்ன செய்து கொண்டு இருந்தது? மற்றய அமைப்புக்களிலிருந்து மாறுபட்ட கருத்துக்களை எழுதியும், பிரச்சாரம் செய்தும் வந்த நீங்கள் சரியான திசைவழியில் போராட்டத்தை முன்னெடுப்பீர்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் நீங்கள் ஏன் தான் பிளவுபட்டீர்களோ என வேதனையுடன் நீங்கள் கேள்விகள் எழுப்புவீர்கள் என்பதை உணர்கின்றோம்.

இக் கேள்வியை நீங்கள் கேட்கிறீர்களோ இல்லையோ நாம் பதில் சொல்லித் தான் ஆக வேண்டும். NLFT அமைப்பில் நாம் இருக்கும் போது அதன் சரியான போக்கிற்கோ தவறான போக்கிற்கோ நாமும் காரணமானவர்கள் என்ற பார்வையிலேயே இங்கு நாம் விமர்சிக்கின்றோம். நாம் எமது முதலாவது பயணம் இதழில் குறிப்பிட்டது போன்று இடதுசாரி இயக்கங்களின் தொடர்ச்சியாக உருவாகிய NLFT கடந்த கால இடதுசாரி இயக்கங்களின் தவறுகளை படிப்பினைகளாக்கி புரட்சிகர அமைப்பாகுவதற்குப் பதில் அவ் இடதுசாரி இயக்கங்களிடம் தொடர்ச்சியாக இருந்த போர்க்குணம்சம் இன்மை என்ற நோய் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் நிற்காமல் NLFTயையும் பற்றிக் கொண்டது. அதன் வெளிப்பாடாக கூரான விமர்சனங்களை நாம் வைத்த போதும் சரியான போராட்ட முன்னெடுப்பில் நாம் ஈடுபடவில்லை. விமர்சனங்களில் இருந்த போர்க்குணம் போராட்ட முன்னெடுப்புகளில் இருக்கவில்லை. விளைவு நாம் மக்களிடம் இருந்தும் ஏனைய முற்போக்கான புரட்சிகர நல்லுணர்வுள்ள போராளிகளிடம் இருந்தும் தனிமைப்படுத்தப்பட்டோம்.

நாம் ஆரம்பத்திலேயே எமது அரசியல் அறிக்கையில் எமது போராட்டம் மக்கள் போராட்டமாக நீண்ட கால ஆயுதப் போராட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் தான் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்ய முடியும் என்று ‘‘அழகாய்’’ எழுதியிருந்தோம். பின் நகர்ப்புற கெரில்லா யுத்தம் எமது போராட்டத்தில் மிகவும் அவசியமானதென்றும் தற்காப்பு யுத்தம் உடனடியாக தொடரப்பட வேண்டும் என்று கூட எழுதினோம். ஆனால் எழுதி என்ன பயன். எதையும் நடைமுறைப்படுத்த சரியான புரட்சிகரமான கட்டுப்பாடான மக்கள் இராணுவத்தை கட்டியமைக்கவில்லையே. நாம் பல கிராமங்களிலும் மக்கள் அமைப்புகளை கட்ட முயற்சித்தோம். ஆனால் அம் மக்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்கமுடியாது இருக்கும் போது அம் மக்கள் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இயக்கங்களின் பின்னால் செல்வது தவிர்க்க முடியாததாகியது. சகல வேலைகளையும் தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உகந்த வகையில் நகர்த்தாமல் வேலைகளை முன்னெடுக்க முடியவில்லை. ஏனைய அமைப்புகள் அவசரமாக இராணுவத்தைக் கட்டும்போது அதில் ஏற்பட்ட சீரழிவுகளும், கட்டுப்பாடற்ற போக்கும் எமது அமைப்பில் பலருக்கும் இராணுவம் கட்டல் பற்றி அச்சத்தையே ஏற்படுத்தியது. விளைவு பாட்டாளி வர்க்கத் தலைமையை உத்தரவாதம் செய்த பின்பு தான் இராணுவம் கட்டப்படவோ, போராட்டத்தில் ஈடுபடவோ முடியும் என்ற கருத்து மேலோங்கியது.

ஏனைய இயக்கங்களால் போராட்டம் முன்னெடுக்கும்போது நாம் இப்போராட்டத்தில் இருந்து அன்னியமாகி விமர்சகர்களாகி அனைவரதும் பகையைச் சம்பாதித்துக் கொண்டோம். விமர்சனங்கள் மக்கள் சரியான அமைப்பை புரிந்து கொள்வதற்கும், போராட்டம் ஆரோக்கியமாக வளர்வதற்கும் அவசியமானது தான். ஆனால் போராட்டம் நடந்து கொண்டு இருக்கும் போது போராட்டத்தில் அன்னியமாகிக் கொண்டு நாம் வைக்கும் விமர்சனங்கள் அதன் வலிமையை இழந்தல்லவா விடுகிறது.

இங்கு இன்னும் ஒரு விடயத்தையும் நாம் குறிப்பிட வேண்டும். ஏனைய பெரிய அமைப்புகள் போன்று வேகமாக ஊதிப் பருத்ததை நாம் நிராகரிக்கின்ற அதே வேளை நாம் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப சிறிய, கட்டுப்பாடான இராணுவ அமைப்பையாவது கட்டியிருக்கலாம்; தற்காப்பு யுத்தத்தில் சிறிய பங்களிப்பையாவது வழங்கியிருக்கலாம். ஏனைய பல ''பெரிய'' அமைப்புகளும் தமது இராணுவத்தை கட்டுவதற்கு அடிப்படையான பொருளாதார ஆயுத தேவைகளை எப்படி நிவர்த்தி செய்தார்கள் என்பது அனைவரும் அறிந்தது. போதைப் பொருள் கடத்தல், பலரைப் பணயம் வைத்தல், மக்கள் சொத்துக்களை கொள்ளையடித்தல், மக்களை பலவந்தப்படுத்தல், வெளிநாட்டு பெருமுதலாளிகளிடமும், பிற்போக்கு சக்திகளிடமும் கொள்கைகளை இழத்தல் போன்றவற்றால் பணத்தையும் வல்லாதிக்க பிற்போக்கு சக்திகளிடம் சுய கௌரவத்தை இழந்து, கொள்கையை இழந்து, போராட்டத்தின் அதிஉன்னத தன்மைகளை இழந்து, துதி பாடி ஆயுதங்களையும் சேகரித்துக் கொண்டனர்.

இதன் விளைவு பார்த்துக்கொண்டு இருக்க ''பெரிய'' அமைப்புக்களாய் இருந்தவை உதிர்ந்து கொண்டு இருப்பதை யல்லவா காண்கிறோம். (இது தான் நடந்த கதை.)

இன்று இப் ''பெரிய'' இயக்கங்களில் இருந்து பலர் வெளியேறி நவீன ஆயுதங்களை விற்கின்றார்கள்.

இந்தளவிற்கு விரைவில் அராஜக சக்திகள் அழியும் என யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது தான். ஆனால் நாங்கள் கணிப்பிடுவது போல் வரலாற்றுச் சக்கரங்கள் மெதுவாகச் சுழலவில்லை. அது வேகமாகத்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

கடந்த மூன்று வருட அனுபவங்கள் கசப்பானவை கசப்பானவையாயிருப்பினும் சில அனுபவங்கள், படிப்பினைகளை எமக்குத் தந்துள்ளது. பல இயக்கங்களும் அழியலாம். பல போராளிகள் போராட்டத்தை விட்டு ஓடலாம். நாம் இன்று மிகச்சிறிய அமைப்பாகவும் இருக்கலாம் ஆனால் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை எமக்குண்டு. சரியான அமைப்பு வளரும் என்பதிலும் தவறான இயக்கங்கள் அழியும் என்பதிலும் எமக்கு நம்பிக்கை உண்டு. கடந்த காலத்தில் விட்ட தவறுகளை திருத்தி அமைத்து எதிர்கால வேலைகளுக்கு அவற்றை அனுபவங்கள் ஆக்குவோம். இன்று போராட்டத்தில் ஏற்பட்ட தேக்கம் திருப்புமுனையாக்கப் படும் என உறுதியாக நம்புவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று பல போராளிகள் தமது வாழ்க்கையை வீணாக்கி விட்டோம் என்று ஏங்குவதை காணக்கூடியதாகவுள்ளது. மக்களின் தியாகங்கள் அழிவுகள் அர்த்தமற்றவையாக நாம் இடமளிப்பதா? மீண்டும் முன்பிருந்த நிலைக்கே திரும்பிச் செல்வதா ? என்ற கேள்வி இன்று யாவரும் எழுப்பவேண்டிய கேள்விகளாகும்.

இன்றைய நிலையில் சரியான இயக்கமொன்று இல்லாமை வெளிப்படை உண்மையாகும். சரியான அரசியல் மார்க்கம் ஸ்தாபன மார்க்கத்தை வகுத்துக்கொண்டு சரியான நடைமுறைத் தந்திரங்களை பின்பற்றுவதன் மூலம் மட்டுமே போராட்டத்தை முன்னெடுக்க முடியும். போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமாயின் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(1) சரியான அரசியல் மார்க்கம் ஸ்தாபன மார்க்கம் வகுக்கப்படல் வேண்டும்.

(2) சரியான விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையான உள்ள நிலவரங்களிலிருந்து உண்மையைத் தேடிக்கண்டுகொள்ளல் எனும் அணுகுமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

(3) இயக்கத்தில் ஜனநாயக மத்தியத்துவம் சரியான வகையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(4) தனிமனித அரசியல் சுதந்திரம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். (ஒருவர் இயக்கத்தில் இருந்து விலகுவதற்கான சுதந்திரம், விலகி புதிய அமைப்பை உருவாக்குவதற்கான சுதந்திரம், விலகி வேறு இயக்கத்தில் சேருவதற்கான சுதந்திரம், தனது கருத்திற்காக அமைப்பிற்குள் போராடுவதற்கான சுதந்திரம், பெரும்பான்மை முடிவை செயற்படுத்திக்கொண்டு மாறுபட்ட சில கருத்துடன் இயக்கத்திற்குள் இருக்கும் சுதந்திரம்)

(5) விமர்சனம் சுயவிமர்சனம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில் சரியான அமைப்பை உருவாக்க எம்முடன் அணிதிரளுமாறு ஏனைய சிதறுண்டுள்ள புரட்சிகர சக்திகளை அறைகூவி அழைக்கின்றோம். சிதறுண்டுள்ள சக்திகளுக்கு நாம் கூறக்கூடியது இதைத்தான். உணர்வுபூர்வமாக அர்ப்பணிக்க வந்த உங்களுக்கு அராஜகம் உங்களைத் தலை அடியாக அடித்துவிட்டது உண்மைதான். பாசிசத்தின் வேர்களை இயக்கங்களுக்குள்ளேயே பரவியிருந்ததை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். உங்கள் போராட்ட அனுபவங்கள் மகத்தானவை, அதை நீங்கள் சரியாக போராட்டத்தில் பிரயோகிக்கும் போது நிச்சயம் வரலாற்றுச் சக்கரங்கள் அதிவேகமாகவே முன்னேறும். அமைதிக்கும் விடிவிற்கும் எம்மிடம் உள்ள ஒரே வழி போராட்டமே! ஆம் அதை நாம் இறுகப்பற்றிக் கொள்வோம். விடிவிற்கான தூரம் வெகு தூரத்தில் இல்லை. அது தவறான அணுகுமுறையால் சிக்கலாக்கப்பட்டதும் எமது அனுபவங்கள் அதை நிச்சயம் சுலபமாக்கும். இன்று உடனடியாக புரட்சிவாதிகள் ஐக்கியப்படுவதும் சகல தேசபக்த சக்திகளையும் கொண்ட ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்குவதும் அவசியமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல்வேறு சமுகப் பிரிவினரை போராட்டத்தில் ஈடுபடுத்தலா பயன்படுத்தலா?

இன்று பொதுவாக ''பயன்படுத்தல்'' என்ற சொல் எம்மத்தியில் பெரிய இயக்கங்களாக கூறப்படும் இயக்கத் தலைமைகளால் அதன் கீழ் அணி ஊழியர்களுக்கு அடிக்கடி கூறப்படுகின்ற தொன்றாகும். கவிஞர் ஒருவர் எமது போராட்டத்தில் ஆர்வமாக இருக்கிறார் என்றால், அப்படியா ''அவரை நாம் எப்படிப்பயன் படுத்தலாம்? எமது இயக்கப் பத்திரிகைக்கு கவிதை எழுதச் சொல்வோமா? வெளிநாட்டில் உள்ள ஒருவர், அவர் தன்னால் முடிந்ததை இப் போராட்டத்திற்கு செய்ய விரும்புகிறார் என்றால், அவரிடம் நிறைய பணம் இருக்குமே அவரை நாம் நிச்சயம் பயன்படுத்த வேண்டும்!. மாணவர்களுக்கு அமைப்பு தேவை என்றால்; ஆம் அது இயக்க பிரச்சார வேலைகளுக்கு நிறையப் பயன்படும் என்பன போன்ற உரையாடல்களை இவ்வியக்கங்களில் பரிச்சயமானவர்களால் அடிக்கடி கேட்க முடியும்.

இச் சொல்லில் அடங்கிய பொருள் தான் என்ன? ஆழந்தான் என்ன? பயன்படுத்தி முடிந்தால் எமது வேலை முடிகிறது. அதன் பின் தூக்கியெறிந்து விடலாம் என்கிறார்களா? (அப்படிச் சொல்லவில்லை அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்)

சமூகத்தின் பல்வேறு கூறினரான மாணவர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், தனிநபர்கள், பெண்கள், வெளிநாட்டில் வாழ்வோர் போன்றோரை போராட்டத்தில் உண்மையில் பயன்படுத்துவது. இல்லை அதிலிருந்து மாறுபடும் எனின் எவ்வகையான அணுகுமுறையை இம்மக்கள் பிரிவினருடன் கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வியை எழுப்பும்போது ஒரு புரட்சிகர இயக்கத்தின் அணுகுமுறை மிகத் தெளிவாக வேறுபடுகிறது.

ஓர் இயக்கம் மக்கள் பிரிவினரை பயன்படுத்தல் என்று அணுகும்போது பல்வேறு மக்கள் பிரிவினரின் பிரச்சினைகள் என்ன? அவர்களுக்குப் போராட்டத்தின் தேவை என்ன? இன்றைய போராட்டத்தில் அவர்கள் எப்படியான பங்களிப்பை அளிக்க முடியும்? இன்று அவர்களின் சிந்தனை முறை எப்படி இருக்கிறது? அவர்களின் சிந்தனை முறையை எப்படி உயர்த்த வேண்டும்? களைந்தெறிய வேண்டிய கருத்துக்கள் என்ன? போன்ற ஆய்வுகள் நிராகரிக்கப்பட்டு தமது குழுநலனிற்காக தமதுஇயக்கம் இயக்கநலன், இம்மக்கள் பிரிவினரை எப்படிப் பயன்படுத்துவது என்ற இவ்வட்டத்திற்குள் குறுகிக் கொண்டதால் இவ் அணுகுமுறை மக்கள் நலனை விட்டு பிரிந்து செல்கிறது. இறுதியில் மக்கள் நலனுக்கெதிராகவே திரும்புகிறது.

மாறாக ஒரு புரட்சிகர இயக்கம், மக்கள் நலனுக்குள் ஏனைய நலன்களை குறுக்கிக் கொண்டதால் மக்களின் பல்வேறு பிரிவினரை போராட்டத்தில் ''ஈடுபடுத்தல்'' என்ற அணுகுமுறையைக் கைக் கொள்கிறது. அது மக்களின் பல்வேறு பிரிவினரதும் வரலாற்றுக் கடமை சமுதாய பங்கு என்பவற்றை ஆய்ந்து அதனை முழுமைப் படுத்தக் கூடிய முறையிலான வேலைத்திட்டங்களை வரையறுத்ததுக்கான அரசியல் அணுகுமுறையைக் கைக்கொள்கிறது. இத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னடிப்படையில் அவர்களின் பங்களிப்பைப் புரிந்து அக்கடமையில் ஈடுபடுத்த அவர்களின் வர்க்க அடிப்படை, சிந்தனைமுறை போன்றவற்றை எமது வரலாற்று நிகழ்வுப் போக்கில் வைத்து ஆராய்ந்து 'ஈடுபடுதல்' என்ற ஆரோக்கியமான அணுகுமுறையைக் கைக்கொள்கிறது.

இங்கு இருவேறுபட்ட நலன்களின் அடிப்படையில் 'பயன்படுத்தல்' 'ஈடுபடுத்தல்' என்ற இரு பதங்களும் இருவேறு அணுகுமுறையை கொண்டுள்ளதென்பது புலனாகிறது. ஒன்று தமது இயக்கம், இயக்க நலன், இயக்கத் தலைமையின் நலன் என்பதில் இருந்து எழுகிறது.மற்றது மக்கள், மக்கள் நலன், மக்கள் விடுதலை என்பதில் இருந்து எழுகிறது.

கடந்த காலங்களில் பொதுவாக பயன்படுத்தல் என்ற அணுகுமுறையும் அதன் விளைவாக மக்களை பார்வையாளர்களாக வைத்திருந்த நிலையும் இயக்கங்களால் கைக்கொள்ளப்பட்டமை இன்றைய தேக்க நிலைக்கான காரணங்களில் முக்கியமாகிறது. எனவே இன்றைய தேக்கத்தை உடைத்தெறிந்து போராட்டத்தில் புதிய பரிமாணத்தை கொண்டுவர முற்படுவோருக்கு, மக்களினுடனான அணுகுமுறையில் கடந்த காலம் பற்றிய புரிதலும் ஆராய்வும் அவசியம். மக்கள் கடந்த காலத்திலும் இன்றும் இயக்கத்திற்குத் தேவையான பணம் சேர்க்கும் கூட்டமாகவும், தமது நடவடிக்கைகளுக்கான ஆதரவைத் தருபவர்களாகவுமே பார்க்கப்பட்டது. புத்திஜீவிகள், கலைஞர்கள் இயக்கங்களின் தனிப்பட்ட பிரச்சாரங்களுக்காகவும், தமது தவறான போக்குகளை நியாயப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டனர். மாணவர் அமைப்பு பெண்கள் அமைப்பு என்பனவும் இயக்கத்தின் பிரச்சாரத்திற்காகவும் தமது அராஜகங்களை நியாயப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்டன. வெளிநாட்டில் வாழ்வோர் தமது இயக்கத்திற்குத் தேவையான பணம் அனுப்பும் சுரங்கங்களாகப் பார்க்கப்பட்டது. தமிழ் நாட்டிலும் இதேபோன்றே பல தனி நபர்களும், அமைப்புக்களும் பணம் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலைமைகள் இம்மக்கள் பிரிவினர் தமது கருத்துக்களை அமைப்புக்குள் கொண்டுவர முடியாதவர்களாயினர். மாறாக இயக்கங்களின் தவறான போக்குகளை, அராஜகங்களை நியாயப்படுத்துவோர் ஆயினர். இதை உணர்ந்த பலர் போராட்டத்தில் இருந்து தலைதெறிக்க ஓட்டம் எடுத்தனர். சிலர் பயன்படுத்தல் என்ற தீய அணுகுமுறையை புரிந்து கொண்டிருந்த போதிலும் தமது தனிப்பட்ட நலனிற்காக இயக்கத்தை களமாக பாவித்து வருகின்றனர். இத்தகைய புத்திஜீவிகளே இன்று இயக்கங்களின் அராஜகங்களை நியாயப்படுத்தி எழுதியும், மேடைகளில் பேசியும் வருபவர்கள் ஆவர்.

மக்களைப் பயன்படுத்தும் இயக்கங்கள் மக்களின் விருப்பங்களைத் தமக்கு சாதகமாக பயன்படுத்தி அதற்கேற்ப பிரச்சாரத்தையும் வேலைமுறையையும் ஆரம்பிக்கின்றது. ஆனால் மக்களின் விருப்பங்களில் பல மக்கள் நலனுக்கெதிரானவை. ஒரு புரட்சிகர இயக்கம் மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் போது மக்களின் விருப்பங்களை வைத்து ஆரம்பிப்பதில்லை. மக்கள் நலனை, மக்கள் தேவைகளை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வேளையினூடாகவே மக்கள் பிரிவினில் உள்ள தவறான கருத்துக்கள், பிற்போக்கான அம்சங்கள் தகர்க்கப்படுகிறது. முற்போக்கான புரட்சிகர உணர்வு வளர்க்கப்படுகிறது. இத்தகைய ஈடுபடுத்தலும், அதனூடாகவே வளர்த்தெடுத்தலும் என்ற ஆரோக்கியமான அணுகுமுறையினூடாகவே போராட்டத்தை மேலும் மேலும் உயர்ந்த கட்டத்திற்கு உயர்த்த முடியும்.

●●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கிய முன்னணி தொடர்பாக

தமிழீழப் போராட்டத்தில் ஐக்கிய முன்னணி, கூட்டு நடவடிக்கை என்ற சொற்களை அடிக்கடி கேட்டிருக்கிறோம். ஐக்கிய முன்னணி பற்றி நிறையப் பேசப்பட்டன. எழுதப்பட்டன. ஆனாலும் சரியான வகையில் ஐக்கிய முன்னணி வேலைமுறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஐக்கியத்திற்குப் பதில் பிளவைத் தான் சந்தித்து வந்துள்ளோம். ஐக்கியத்திற்கான வழியே கிடைக்காதா என்ற கேள்வி இன்று பலராலும் எழுப்பப்படுகிறது. இவ்வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுமாயின் நாம் ஐக்கிய முன்னணி பற்றி சற்று விரிவாக பார்க்க வேண்டும்.

ஒரு பொது நோக்கில் பல்வேறு வர்க்கங்கள் அல்லது வர்க்க ஸ்தாபனங்கள் அல்லது சமூகப்பிரிவுகள் ஒரு பொதுவான நடவடிக்கையில் அமைப்பாக இணைந்து கொள்வதையே நாம் ஐக்கிய முன்னணியானது இரண்டு வகையில் கட்டப்படலாம்.

1. மேலிருந்து கட்டல்:- வெவ்வேறு வர்க்கங்களின் ஸ்தாபனங்களாக உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் ஸ்தாபனங்கள் ஒரு பொது நோக்கில் பொதுவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இணைந்து செயல்படுதல். இதில் தலைமை மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு கீழணி வரைக்கும் கூட்டான செயற்பாட்டை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. [இது போன்ற ஐக்கிய முன்னணி சீனாவில் 1937இற்கும் 1945இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, கோமிந்தாங் இணைந்து உருவாக்கியது]

2. கீழிருந்து கட்டல்:- ஒரு குறிப்பிட்ட நோக்கிற்காக பல்வேறு வர்க்கங்களையும் இணைத்த ஒரு ஸ்தாபனமாக ஆரம்பத்தில் இருந்த கட்சி ஒன்றினால் கட்டப்படல். அதாவது ஸ்தாபனத்தை ஆரம்ப உறுப்பிலிருந்தே கட்டல். இது போன்ற ஐக்கிய முன்னணிகள் வியட்நாமிய, கம்பூச்சிய விடுதலைப் போராட்டங்களிலும் நிக்கரக்குவாவிலும் (சன்டினிஸ்ட்) உருவாக்கப்பட்டன.

இந்த வகையான ஐக்கிய முன்னணிகள் யுத்த தந்திர ரீதியிலோ, நடைமுறைத் தந்திர ரீதியிலோ கட்டப்படலாம். யுத்த தந்திர ரீதியிலான ஐக்கிய முன்னணி குறிப்பிட்ட யுத்த தந்திர அடிப்படையிலான திட்டத்தின் அடிப்படையில் கட்டப்படும். தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சிக்கான திட்டத்தினடிப்படையில் நாம் கட்டும் ஐக்கிய முன்னணி யுத்த தந்திர ரீதியிலானது இந்த அடிப்படையில் கட்டப்படும் ஐக்கிய முன்னணியாகவே தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியைப் பார்க்கிறோம்.

ஐக்கிய முன்னணியானது நடைமுறைத் தந்திர ரீதியிலோ அல்லது யுத்த தந்திர ரீதியிலோ கட்டப்படலாம். நடைமுறைத் தந்திர ரீதியிலான ஐக்கிய முன்னணி, குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தின் சில நடைமுறைத் தந்திர ரீதியிலான கடமைகளை நிறைவு செய்வதற்காக கட்டப்படும் ஐக்கிய முன்னணி நடைமுறைத் தந்திர ரீதியிலான ஐக்கிய முன்னணியாகும். ஐக்கிய முன்னணியானது, சூழல் மாற, அதன் தன்மையில் மாறும். ஐக்கிய முன்னணியில் உள்ள சமூகப் பிரிவுகளின் சேர்க்கை மாறும். நடைமுறைத் தந்திர ரீதியிலான ஐக்கிய முன்னணியானது. வளர்ச்சிப்போக்கில் யுத்த தந்திர ரீதியான ஐக்கிய முன்னணியாகவும் மாறலாம். சில வேளைகளில் குறிப்பிட்ட நடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைத் தந்திர கடமையைப் பூர்த்தி செய்து அப்பால் சென்று யுத்த தந்திர கடமையை நிறைவு செய்யலாம். இல்லை யேல் உடைந்தும் போகலாம்.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள், முரண்பாடுகள் நிலவும். முதன்மை முரண்பாட்டை தீர்ப் பதற்கான போராட்டத்தை முன்னெடுப்ப தன் மூலம் மட்டுமே ஏனைய முரண்பாடுக ளைத் தீர்ப்பதற்கான வழி திறக்கும்; முதன்மை முரண்பாட்டை தீர்க்கும். போராட்டத்தை முன்னெடுக்காமல் ஏனைய முரண்பாடுகளை தீர்ப்பதற்கான போராட் டத்தை முன்னெடுப்பது சாத்தியமில்லை. எமது நாட்டுச் சூழலைப் பொறுத்தளவில் தேசிய இன முரண்பாடு பிரதான முரண் பாடாகவுள்ளது. இம் முதன்மை பிரச்சினை யைத் தீர்ப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்காமல் சமூக மாற்றத்தை ஏற் படுத்துவதற்கான பயணத்தில் ஒரு அடி கூட முன்னுக்கு செல்ல முடியாது. பிர தான எதிரிக்கு எதிராக அணி திரட்டக் கூடிய அனைத்து சக்திகளையும் ஸ்தாபன மயப்படுத்தி, அணி திரட்டுவது அவசிய மானது. நாம் இன்றைய கட்டத்தில் புரட் சியின் நேச அணியாகக் கூடிய அனைத்து சக்திகளையும் ஸ்தாபனமயப்படுத்தி அணி திரட்டுவதற்கான வழியாக ஐக்கிய முன் னணி உருவாக்கப்பட வேண்டும். எம் முன்னே உள்ள பிரதான இலக்கை அடித்து வீழ்த்த ஐக்கிய முன்னணித் தந்திரத்தை உபயோகிக்கத் தவறுவோமாயின் நாம் பலவிதமான இலக்குகளில் குறிவைத்து எமது ஏவைகள் பிரதான எதிரியை வீழ்த் தாமல் இரண்டாந்தர எதிரியையும் நேச அணிகளையும் சுட்டு வீழ்த்தியவர்களா வோம்.

ஐக்கிய முன்னணிக்குள் ஒவ்வொரு பிரிவினதும் சுதந்திரமும் முன் முயற்சியும் பேணப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவின் இன்றியமையாத உரிமைகள் ஒத் துழைப்பிற்கும் ஐக்கியத்திற்கும் பலியாக் கப்படக் கூடாது. அதற்கு மாறாக குறிப் பிட்ட வரம்புகளிற்குட்பட்டு அவற்றில் உறு தியாக ஊன்றி நிற்க வேண்டும். இவ்வா றாக மட்டுமே ஒத்துழைப்பு முன்னேற்றப் பட முடியும். உண்மையில் இவ்வாறாக மட் டுமே ஒத்துழைப்பு ஏதும் இருக்கவும் முடி யும். இல்லையேல் ஒத்துழைப்பு ஒருமிப்பாக மாறிவிடும். ஐக்கிய முன்னணி தவிர்க்க முடியாதபடி பலியாகும்.

நாம் 1983 ஜூலைக் கலவரத்தின் பின் ஏற்பட்ட சூழலைப் புரிந்து கொண்டு தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல யுத்த தந்திர ரீதியான ஐக் கிய முன்னணியாக NLFTயை உருவாக்கி னோம். நடைமுறைத் தந்திர ரீதியில் ஏனைய இயக்கங்களுடன் பொது நோக்கில் ஐக்கி யப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியி ருந்தோம். பரந்துபட்ட தேசபக்த சக்தி களை ஒன்றிணைத்த பரந்துபட்ட ஐக்கிய முன்னணி ஏன் உருவாக முடியவில்லை. அப்படியான ஐக்கிய முன்னணியை உரு வாக்குவதற்காக நாம் எவ்வளவு ஆக்கபூர் வமான நடவடிக்கைகளை மேற்கொண்டி ருக்கிறோம் என்பவற்றை ஆராய்வது அவ சியமானது.

ஐக்கிய முன்னணியானது ஒவ்வொரு நாட்டின் சூழலிற்கேற்ப வேறுபடும். அது சில சூத்திரங்களிற்குட்பட்டு உருவாகுவ தில்லை. எமது குறிப்பிட்ட சூழ்நிலையில் பாட்டாளி வர்க்க சக்திகள் தம்மை ஸ்தா பனப்படுத்தி தம்மை ஒரு சக்தியாக ஸ்தா பித்து பின் ஏனைய சக்திகளை அணிதிரட் டித்தான் தேசிய விடுதலைப் போராட்டத் தில் ஈடுபட முடியும் என்பது வெறும் சூத் திரத்திற்குள் நின்று பிரச்சினைகளை பார்ப்ப தாலும் யதார்த்தத்தை புரியாமையால் ஏற்பட்ட தவறான கருத்தாகும். இங்கு எமது விருப்பத்திற்கு ஏற்றபடி போராட் டம் வளர்ந்து வரவில்லை. போராட்டம் அப்படி வளர்ந்து வரவில்லை. போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி வளரவும் முடியாது. எமது போராட்டம் சீராக படிமுறையாக வளர்ந்து இன்றைய கட்டத்திற்கு வரவில்லை. ஒரு சீரற்ற வளர்ச்சி முறை இருந்தது. இது குறைவிருத்தித் தன்மை கொண்டதாக இருந்தது. போராட்டம் வளர்ச்சி பெற்று குறிப்பிட்ட கட்டத்திற்கு வந்தபின் நாம் அந்த இடத்திலிருந்தே எமது வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வர்க்கமும் தத்தமது உலக நோக்கிற்கேற்பவே சமூகத்தை மாற்ற முனைகிறது. இந்த அடிப்படையில் ஐக்கிய முன்னணிக்குள் உள்ள ஒவ்வொரு சமூகப் பிரிவும் தமது தமது உலக நோக்கிற்கேற்ப போராட்டத்தை முன்னெடுக்கவே விரும்பும்; முனையும். இதனைப் புரிந்து கொண்டு பாட்டாளி வர்க்க உலக நோக்குள்ள சக்திகள். ஐக்கிய முன்னணிக்குள் ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டை சரியாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே போராட்டத்தை சரியான திசைவழியில் முன்னெடுக்க வேண்டும். பாட்டாளி வர்க்க உலக நோக்குள்ள சக்திகள் ஏனைய சக்திகளுடன் இணைந்து வேலை செய்வதன் மூலமே சரியான திசை வழியில் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். முன்னேறிய பிரிவினர் பின்தங்கிய பிரிவினருடன் இணைந்து செல்லக்கூடிய தூரம் வரைக்கும் இணைந்து செல்வது அவர்களது தொடர்ந்த பயணத்திற்கு உதவிகரமாக இருக்குமேயன்றி பாதகமாக இருக்காது. முன்னேறிய பிரிவினரது தொடர்ந்த பயணம் தனித்தும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட யுத்த தந்திரக் கடமைகளை நிறைவு செய்ய சரியான நடைமுறைத் தந்திரங்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

முன்னேறிய பிரிவினர் தமது தலைமையை நிறுவுவது என்பது ஐக்கிய முன்னணியில் சரியான வழிகாட்டல், முன்முயற்சி, தியாகம் என்பவற்றின் மூலமே சாத்தியம். ஐக்கிய முன்னணியில் சிறிய சக்தியாயினும் அது சரியான சக்தியாக இருப்பின் அதன் சரியான அரசியல் வழிகாட்டல் முன்முயற்சி, செயல்திறன் மூலம் ஏனைய சக்திகளின் நம்பிக்கையைப் பெறவும், ஏனைய சக்திகளில் மாற்றத்தைக் கொண்டுவரவும் முடியும். இதன் மூலம் காலப்போக்கில் சரியான தலைமையை உருவாக்கவும் முடியும். பாட்டாளி வர்க்கம் தனக்கான தனியான ஸ்தாபனத்தை உருவாக்கி தலைமைதாங்க முடியாத சூழ்நிலையில் ஐக்கிய முன்னணியில் இணைந்து வேலை செய்வதன் மூலமும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் முனைப்பாக ஈடுபடுவதன் மூலமும் மட்டுமே பாட்டாளிவர்க்கம் தனக்கான ஸ்தாபனத்தை உருவாக்க முடியும். பாட்டாளி வர்க்கம் தனக்கான தனியான ஸ்தாபனத்தை உருவாக்கிய பின் தான் போராட்டத்தில் ஈடுபடுதல் என்பது சில சமயங்களில் சாத்தியமற்றது. பாட்டாளி வர்க்கம் பலவீனமான நிலையில் உள்ள போதும் பாட்டாளிவர்க்க சக்திகள் அரங்கிற்கு வராத நிலையில், ஏனைய வர்க்க சக்திகளுடன் இணைந்து வேலை செய்வதன் மூலமே பாட்டாளிவர்க்க சக்திகளை முன்னணிக்கு கொண்டுவர முடியும்.

நாம் யுத்ததந்திரக் கடமையான தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்ய இன்றைய கடமையான தேசிய தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பது அவசியமானது. பாசிச அரசால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இன அழித்தொழிப்பு நடவடிக்கையை முறியடிக்க சகல தேசபக்த சக்திகளையும் உள்ளிட்ட பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்குவதும் தேசிய தற்காப்பு யுத்தத்தை முன்னெடுப்பதும் அவசியமானதொன்று. தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் தேசிய தற்காப்பு யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கக்கூடிய வகையில் ஓர் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்காதது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரதிருஷ்டமே. தமிழீழ விடுதலை இயக்கங்களிடையே இருந்த தவறுகளான அராஜகம், குழுவாதம், சுத்த ராணுவக் கண்ணோட்டம், வறட்டு வாதம், கதவடைப்பு வாதம் என்பன பரந்துபட்ட ஐக்கிய முன்னணி உருவாவதற்கு தடையாக விருந்தன. இப்போக்குகள் இன்னமும் நிலவுகின்றன. இவற்றிற்கெதிரான போராட்டத்தை உறுதியாக நடத்துவதன் மூலமே நாம் பரந்துபட்ட தேசபக்த சக்திகளை உள்ளிட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியும். நாம் இப்போக்குகளிற்கெதிராக போராடாவிடின் உருவாகும் ஐக்கிய முன்னணி போலியானதொன்ருகவே இருக்கும்.

ஐக்கிய முன்னணிக்குள் ஐக்கியமும் போராட்டமும் என்றும் இருக்கும். போராட்டமற்ற ஐக்கியம் சரணுகதி நிலையாகவோ, பாட்டாளி வர்க்கம் ஏனையவற்றின் வாலாகிச் செல்லும் நிலைக்கோ செல்லலாம். கடந்தகால ENLF இன் வரலாறு இதற்கான சில படிப்பினைகளைத் தந்துள்ளது. போராட்டமற்ற முழுமையான சமரசமே அங்கு நிலவியது. நாம் எந்தக் கூட்டமைப்பை உருவாக்கும்போதும் நிபந்தனைகள் வரையறுக்கப்படல் வேண்டும். அந் நிபந்தனைகட்குட்பட்டு நாம் நேர்மையாகவும் ஒழிவுமறைவின்றியும் இருத்தல் வேண்டும். ஐக்கிய முன்னணிக்கு ஊறு விளைவிக்காத வகையிலும் ஐக்கிய முன்னணி வேலையை (கூட்டு வேலையை) முன்னெடுக்க உதவும் வகையிலும் தனியாகவும் வேலைகள் முன்னெடுக்கப்படலாம். எந்த வரையறையும் இல்லாமல் உருவாக்கப்படும் கூட்டு பிரயோசனமாய் அமையாது. ENLF இன் தோல்வி இதனையே காட்டுகின்றது. நாம் ஒவ்வொரு சக்திகளிடமும் உள்ள சரியான அம்சங்கள், தவருன அம்சங்கள் எவை என்பதை சரியாக இனங்கண்டு கொள்வதும் சரியான அம்சங்களை போராட்டத்திற்கு எப்படிச் சாதகமாக்குவது என்பதையும் சரியாகக் கணித்துக்கொள்ளல் இன்றைய தேவையாகும். தவருன அம்சத்தை மட்டும் பார்த்து நாம் ஐக்கியப் படுத்த வேண்டிய சக்திகளை ஐக்கியப்படுத்தாவிடின் மேலும் பின்னடைவுகளை சந்திப்போம். எவ்வளவு மோசமான அம்சங்கள் இருப்பினும் சரியான அம்சங்களை வளர்த்து போராட்டத்திற்கு சாதகமாக்கிச் செல்லும் போது தவருன போக்குகள்கூட கால ஓட்டத்தில் இல்லாமல் செய்யப்படலாம். இந்த அடிப்படையிலேயே நாம் ஐக்கிய முன்னணி வேலைகளை அணுகவேண்டும். கடந்த கால தோல்விகள், பின்னடைவுகள், அழிவுகள் என்பவற்றை படிப்பினைகளாகக் கொண்டு குறுகிய குழுநலன் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகாது மக்கள் நலன் அடிப்படையில் அணுகினுல் மட்டுமே எம்மால் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்க முடியும். எமது மக்களுக்கு சுபீட்சமும் ஜனநாயகமும், சுதந்திரமும் கொண்ட வாழ்வை உருவாக்க போராட, பரந்துபட்ட தேசபக்த சக்திகளை கொண்ட ஐக்கிய முன்னணியை உருவாக்குவது உடனடிப் பணியாகும். ஒரு பரந்துபட்ட தேசிய ஜனநாயக முன்னணியைக் கட்டுவதன் மூலமும் அதில் ஐக்கியமும் போராட்டமும் என்ற வழிமுறையை பின்பற்றுவதன் மூலமுமே முன்செல்ல முடியும். இதுவே இன்றைய உடனடிக் கடமையுமாகும்.

போராட்டத்துக்காக ஐக்கியப் படுவோம்!

ஐக்கியத்துக்காகப் போராடுவோம்!

●

நமது உரிமைகளுக்காகப் போராடும் ஆசையால் ஒன்றுதிரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது வாழ்வை நாம் போராடிப் பெறமுடியாது.

- கார்க்கி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அட்டை பின் பக்கத் தொடர்**

எல்லா மனிதர்களும் ஏதோ அளவில் புத்திஜீவிகளாக இருக்கிறார்கள் என்பதை அங்கீகரிக்கும் அதேசமயம் ஒவ்வொரு மனிதனையும் புத்திஜீவியாக மாற்றவேண்டும் என்பதை ஒவ்வொரு சமூகப் போராளியும் புரிந்துகொள்ள வேண்டும். மனித அறிவானது படிப்பு, ஆய்வு, வர்க்கப் போராட்டம் என்ற மூன்றுவகையில் கிடைக்கப்பெறுகிறது. இம்மூன்று வடிவிலும் அறிவை வளர்த்துக்கொள்வதன் மூலமே ஒரு போராளி தன்னை அமைப்பியல் சார்ந்த புத்திஜீவியாக வளர்த்துக்கொள்ள முடியும். இன்று எமக்கு புத்திஜீவிகளை உருவாக்குவதில் இரண்டு பணிகள் உண்டு. ஒன்று பாரம்பரிய புத்திஜீவிகளில் மாற்றத்தை கொண்டுவந்து அவர்களை புரட்சிகர புத்திஜீவிகளாக புனருருவாக்கம் செய்தல். மற்றயது அமைப்புவேலையினூடாக நிறைய புரட்சிகர புத்திஜீவிகளை உருவாக்கல். அமைப்பில் இல்லாமல் ஒரு புத்திஜீவி புரட்சிகர புத்திஜீவியாக இருப்பது கடினமானது. எனவே இன்றைய சூழலில் புத்திஜீவிகளை ஸ்தாபனமயப்படுத்துவதும் அதற்கு சரியான வழிகாட்டலைக் கொடுப்பதன் மூலமே புத்திஜீவிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் மத்தியில் கருத்துக்களை எடுத்துச்சொல்வதில் புத்திஜீவிகள் பிரதான பங்காற்ற முடியும். மக்களிடம் கருத்துக்களை எடுத்துச்சொல்லல் மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளல் எனும் நடைமுறையினூடாகவே புத்திஜீவி தன்னை வளர்த்துக்கொள்ளவும் தனது அறிவைச் சோதித்துக்கொள்ளவும் முடியும்.

தமிழீழப் போராட்டத்தை எடுத்துக்கொண்டால் புத்திஜீவிகள் என்போர் (அமைப்புடன் தம்மை இணைத்துக்கொண்டபோது) அமைப்பின் நடவடிக்கைகளிற்கு நியாயம் கற்பிப்போராயும் கூலிக்கு மாரடிப்போராயும் உள்ளனர். எமது போராட்டத்தினூடாக உருவான புரட்சிகர புத்திஜீவிகளின் தொகை மிகமிக குறைவே. அமைப்பியல் சார்ந்த புத்திஜீவிகளை பெருமளவில் உருவாக்குவதும் ஏனைய புத்திஜீவிகளை அணிதிரட்டி மாற்றத்தை ஏற்படுத்துவதும் இதன்மூலம் புத்திஜீவிகளை ஸ்தாபனமயப்படுத்துவதும் அவர்கள் ஏனைய ஜனநாயக தேசபக்த சக்திகளுடன் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியில் தம்மை இணைத்துக்கொள்வதன் மூலமே தமது விடுதலையைப் பெற முடியும்.

---

*"மேதைக்கு அறிகுறி சராசரி அறிவைவிட சற்று அதிகமான அறிவுடையதாகும். ஆனால் மேம்பட்ட அறிவு என்பது தனி மனிதனையோ அல்லது ஒரு சில மக்களையோ சார்ந்திருப்பது அல்ல; இது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும் ஒரு கட்சியைச் சார்ந்திருக்கிறது. ஒரு சரியான அரசியல் வழியையும், மக்களின் ஒட்டுமொத்தமான அறிவையும் சார்ந்திருக்கிறது."*

- மா ஓ -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சிகர புத்திஜீவிகளின் பாத்திரம் பற்றி

புத்திஜீவிகள் எமது சமூகத்தில் முக்கியமான சமூகப் பிரிவினர் என்ற வகையில் அவர்களின் சமூகப்பாத்திரத்தை சரியாகப் புரிந்துகொண்டு அவர்களை சரியான சமூகநடவடிக்கையில் ஈடுபடுத்துவதன்மூலமே சமூகமாற்றத்தினை ஏற்படுத்த முடியும். இதுபற்றிய தெளிவான புரிதல் இன்மையால் கடந்தகால அரசியல் இயக்கங்கள் புத்திஜீவிகளை கையாள்வதில் தவறிழைத்தன. எமது நாட்டின் புத்திஜீவிகளிற்குரிய தனித்துவமான பண்புகள், சமூகப்பாத்திரம் என்பவற்றைப் பற்றிய முழுமையான புரிதல் அவசியம். இக்கட்டுரையில் சகல அம்சங்களையும் முழுமையாக ஆராய முடியாவிடினும் புத்திஜீவிகளின் பாத்திரம் பற்றிய சரியான முடிவிற்கு வர உதவும் வகையிலான கருத்துப்பரிமாறலை தொடர்ந்து நடத்த உதவும் நோக்கிலேயே இது எழுதப்படுகின்றது.

புத்திஜீவிகளை இரண்டு வகையில் வகைப்படுத்தலாம். முதல்வகையினர் பாரம்பரிய புத்திஜீவிகள் இவர்கள் இந்த சமூகத்தின் போக்குகளை அங்கீகரித்து இந்த சமூக அமைப்பைக்கட்டிக்காக்க பணியாற்றுபவர்கள். இரண்டாவது வகையினர் அமைப்பியல் சார்ந்த புத்திஜீவிகள். இவர்கள் முற்போக்கு தன்மைகொண்ட புதிய சமூக அமைப்பை விரும்புபவர்கள். பாரம்பரிய புத்திஜீவிகள் தம்முடன் பட்டங்கள், கௌரவங்கள் என்பவற்றை கூட சுமந்துகொண்டிருப்பவர்கள். அமைப்பியல் சார்ந்த புத்திஜீவிகள் பட்டங்கள் பெற்று புத்திஜீவிகளாய் உருவானவர்களல்ல. இவர்கள் சமூக நடவடிக்கைகள், சமூகப் போராட்டங்களினூடாக தம்மை வளர்த்துக்கொள்பவர்கள். அமைப்பியல் சார்ந்த புத்திஜீவி என்பவன் தன்னை அரசியல் ஸ்தாபனத்துடன் இணைத்துக் கொள்வதன்மூலமும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலமும்தான் தன்னை புத்திஜீவியாக வளர்த்துக் கொள்கிறான்.

ஒரு அரசியல் இயக்கத்தின் அரசியல் தரத்தைக் கணிப்பதாயின் அவ்வியக்கத்தில் உருவான அமைப்பியல் சார்ந்த புத்திஜீவிகளின் தரத்தைக் கொண்டு கணிக்கலாம். அமைப்பியல் ரீதியில் உருவான புத்திஜீவிகளாக நாம் ஸ்டாலின், மாஓ, டிமிட்ரோவ், ஹோசிமின் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் படித்து பட்டம் பெற்றவர்களல்ல. மக்களிடையே வேலை செய்ததன்மூலம் சமூகத்தைப்படித்து போராட்டத்தினூடாக தம்மை சிறந்த புரட்சிகர புத்திஜீவிகளாக வளர்த்துக்கொண்டவர்கள்.

— அட்டை உள் பக்கம் பார்க்க —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்